பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 71

புதன்கிழமை
05 பெப்ரவரி 2025

தை 23 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

புதன்பொய்கை

நாணயநிதிய ஒப்பந்தம்: மறைக்கப்படும் சிக்கல்கள்
03

சுதந்திரதினத்துக்கு எதிர்ப்பு:

# தாயகமெங்கும் நேற்றுப் போர்!



யாழ்ப்பாணம், பெப்ரவரி 5

காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்த வேண்டும், அரசியற்கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழர் தாயகத்தில் நேற்றுப் பரவலாக போராட்டங்கள் இடம்பெற்றன. 15

- காணாமலாக்கப்பட்டோர் விடயம்
- அரசியல் கைதிகளின் விடுவிப்பு
- இனப்படுகொலைக்கு சர்வதேச நீதி
- ஊடக அச்சுறுத்தலுக்கு நடவடிக்கை

## கறுப்புநாள் போராட்டத்தில் முன்வைத்த கோரிக்கைகள்

யாழ்ப்பாணம், பெப். 5
கிளிநொச்சி மாவட்ட காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கான சங்கத்தினரால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் நிறைவில் சில வலியுறுத்தல்களை முன்வைத்து அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி, முன்வைக்கப் பட்ட வலியுறுத்தல்களாவன:- 15




## இறங்கியது சிங்கக்கொடி ஏறியது கறுப்புக்கொடி!

பல்கலையில் சம்பவம்

யாழ்ப்பாணம், பெப். 5
இலங்கையின் சுதந்திரதினத்தைக் கரிநாளாகப் பிரகடனப்படுத்தி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட மாணவர்கள், ஆரம்பத்தில் பல்கலைக்கழக 15

அரசியலமைப்பின் விளைவு:

## சர்வாதிகாரமே உருவாக்கம்!

சுட்டிக்காட்டுகிறார் கர்தினால்

கொழும்பு, பெப். 5
நாட்டில் தற்போதுள்ள அரசியலமைப்பால் சர்வாதிகார வெறியே தோற்றம் பெற்றுள்ளது என்று பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.
ஸ்ரீலங்காவின் சுதந்திர தினத்தை முன்னிட்டு, கொழும்பு அனைத்துப் புனிதர்கள்தேவாலயத்தில் நேற்று சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன. இந்த வழிபாடுகளைத் தலைமையேற்று நடத்திய 15

## இலங்கைக்கு இன்னும் முழுச்சுதந்திரம் இல்லை

ஒப்புக்கொள்கின்றார் அநுர



கொழும்பு, பெப். 5
பொருளாதார, சமூக, கலாசார சுதந்திரத்தை முழுமையாகப் பெற்றுக்கொள்வதற்காக சுதந்திரதினப் போராட்டத்தை தற்போதும் நாம் முன்னெடுக்க வேண்டியுள்ளது என்று ஜனாதிபதி அநுர தெரிவித்துள்ளார். 15

## தவறான முடிவெடுத்து இளைஞர் உயிர்மாய்ப்பு!



யாழ்ப்பாணம், பெப். 5
யாழ்ப்பாணம் கைலாசபிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.
உயிரிழந்த இளைஞர் 28 வயதுடையவர். யாழ்ப்பாணப் 15

கனியமணலை

## ஆராய்வதற்கு வந்தகுழு மக்களால் விரட்டியடிப்பு

மன்னாரில் சம்பவம்

மன்னார், பெப். 5
மன்னார் வங்காலை கடற்கரைப் பகுதியில் கனியமணல் ஆராய்ச்சிக்காக வருகைதந்த குழுவொன்று, மக்களின் எதிர்ப்பைத் தொடர்ந்து திரும்பிச் சென்றுள்ளது.
கிராமத்தில் உள்ள எந்தத் தரப்பிடமும் எவ்வித அனுமதியும் பெற்றுக்கொள்ளாமல் சுமார் 20 பேர் அடங்கிய குழுவினர் அவ்விடத்திற்கு வருகைதந்து கனியமணல் ஆராய்ச்சியை முன்னெடுத்துள்ளனர். இதையடுத்து வங்காலை பங்குத்தந்தை தலைமையில் ஒன்று கூடிய மக்கள், கடும் எதிர்ப்பை வெளியிட்டதைத் தொடர்ந்து அந்தக் குழுவினர் 15

'மழை வரும் முன்னே டெங்கு வரும் பின்னே எண்டது எப்பதான் மாறுமோ?'

எகிறுகின்றது டெங்கு

## அபாயமான மாவட்டமாக யாழ்ப்பாணம் அறிவிப்பு!

கொழும்பு, பெப். 5
இலங்கையில் டெங்குத் தொற்றின் பரவல் தீவிரம் பெற்றுள்ள நிலையில், யாழ்ப்பாணம் மாவட்டம் டெங்குத் தொற்றின் அபாயம் உள்ள வலயமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
ஜனவரி மாதத்தில் மட்டும் 4 ஆயிரத்து 943 பேருக்கு டெங்குத் தொற்று ஏற்பட்டுள்ளது. இதையடுத்து நாட்டில டெங்கு ஆபத்து அதிகமுள்ள மாவட்டங் 15

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கொவிசெத**
திகதி 04.02.2025
சீட்டிழுப்பு இலக்கம் 3979
ஆங்கில எழுத்து H
வெற்றி இலக்கங்கள் 20 40 56 78
விசேட எழுத்து H

**ஹந்தஹன ராசி சுப பலன்**
திகதி 04.02.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1046
வெற்றி இலக்கினம் மீனம்
வெற்றி இலக்கங்கள் 17 27 45 58

**NLB ஜய**
திகதி 04.02.2025
சீட்டிழுப்பு இலக்கம் 05
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 2 4 1 9

**மெகா பவர்**
திகதி 04.02.2025
சீட்டிழுப்பு இலக்கம் 2085
ஆங்கில எழுத்து J
சுப்பர் இலக்கம் 08
வெற்றி இலக்கங்கள் 04 28 43 63

**மஹஜன சம்பத**
திகதி 04.02.2025
சீட்டிழுப்பு இலக்கம் 3737
ஆங்கில எழுத்து Q
வெற்றி இலக்கங்கள் 3 6 1 2 9 3

**தன நிதானய**
திகதி 04.02.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1767
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கங்கள் 07 10 44 47
விசே. எழுத்து M

**அத சம்பத**
திகதி 04.02.2025
சீட்டிழுப்பு இலக்கம் 312
ஆங்கில எழுத்து Q
வெற்றி இலக்கங்கள் 1 2 9 3

# அரசாங்கத்தின் அடிவருடிகளே தையிட்டி விகாரைக்கு ஆதரவு

## கஜேந்திரகுமார் எம்.பி. குற்றச்சாட்டு

**யாழ்ப்பாணம், பெப்.5**

**இலங்கையில் சட்டவிரோதமாக அனுமதியின்றிக் கட்டப்பட்ட மத வழிபாட்டுத் தலங்கள் இடிக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறிருக்க தையிட்டியில் கட்டப்பட்ட விகாரைக்கு மாற்றுக்காணிகள் வழங்க வேண்டும் என்று கூறுபவர்கள் அரசாங்கத்தின் அடிவருடிகளே என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கொழும்பில் அனுமதியின்றிக் கட்டப்பட்டது என்று கூறி இஸ்லாமியப் பள்ளிவாசல் இடிக்கப்பட்டிருக்கின்றது. இலங்கையில் சட்டவிரோதமாக அனுமதியின்றிக் கட்டப்பட்ட மத வழிபாட்டுத்தலங்கள் இடிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அரசாங்கத்தின் அடிவருடிகளாகச் செயற்படுவோர் தையிட்டியில் சட்டவிரோதமாகக் கட்டப்பட்ட விகாரையால் காணியை இழந்த மக்களுக்கு மாற்றுக் காணிகள் வழங்கலாம் என்று கூறுகின்றனர்.

இறுதியாக நடந்த மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் தையிட்டியில் சட்டவிரோதமாக விகாரை அமைக்கப்பட்டுள்ள தனியார் காணிகளுக்குப் பதிலாக மாற்றுக்காணிகளை மக்கள் கேட்கின்றனர் என்று வடக்கு மாகாண ஆளு நர் தெரிவித்திருந்தார். அவரது கருத்தை அன்றே நான் மறுத்திருந்தேன். சட்டவிரோதமான செயற்பாட்டை நியாயப்படுத்தும் நோக்கில் தமிழ் ஆளுநர் ஒருவர் செயற்படக்கூடாது.

சட்டவிரோதக் காணியால் காணிகளை இழந்த சிலரை அழைத்து வடக்கு ஆளுநர் கலந்துரையாடல் நடத்தியதாக அறிந்தோம். அந்தக் கலந்துரையாடல் வெளிப்படைத்தன்மையான கலந்துரையாடலாக அமையவில்லை. மக்கள் பிரதிநிதிகளை இணைத்துக்கொள்ளாது வடக்கு ஆளுநர் தனியாக இந்தக் கலந்துரையாடலை நடத்தியிருக்கின்றார். காணிகளை இழந்த மக்களை நாம் சந்தித்திருக்கின்றோம். அவர்கள் தெளிவாக உள்ளனர். கடந்த ஆண்டு இறுதியில் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதம் தொடர்பில் ஆளுநருக்குக் கூறியிருந்தோம். மக்களின் பிரதிபலிப்புத் தொடர்பில் சில நாள்களுக்குள் நாங்கள் வெளிப்படையாக அறிந்து அதுதொடர்பில் எதிர்காலத்தில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்வோம்.

நடந்து முடிந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பிரயோசனம் அற்ற ஒன்று என்றே கூறுவேன். நாட்டின் ஜனாதிபதி ஒரு மாவட்டத்தின் அபிவிருத்திக் கலந்துரையாடலுக்கு வரும்போது அவர் பிரச்சினைகளுக்குத் தீர்வை முன்வைத்திருக்க வேண்டும். மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைக்குத் தீர்வுகளை முன்வைக்காத ஒரு கலந்துரையாடலாகவே இந்தக் கலந்துரையாடல் அமைந்தது- என்றார். (எ-125)

**சுபிரி தன சம்பத**
திகதி 04.02.2025
தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் 0421
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கம் 5 0 5 9 3 5

**Super Ball DLB**
திகதி 04.02.2025
தினம் செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 2711
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கம் 19 23 42 55

**சனிதா DLB**
திகதி 04.02.2025
தினம் செவ்வாய்க்கிழமை
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கம் 02 08 43 64
வெற்றி வாரம் 4872

**SASIRI DLB**
திகதி 04.02.2025
தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் 0615
வெற்றி இலக்கம் 09 32 35

**லக்ன ராசி DLB**
திகதி 04.02.2025
தினம் செவ்வாய்க்கிழமை
கன்னி
வெற்றி இலக்கம் 13 25 31 55
சீட்டிழுப்பு வாரம் 4423

**KAPRUKA DLB**
திகதி 04.02.2025
தினம் செவ்வாய்க்கிழமை
ஆங்கில எழுத்து Y
சுப்பர் இலக்கம் 18
வெற்றி இலக்கம் 35 40 68 69
வெற்றி வாரம் 1887

**அத கோடிபதி DLB**
திகதி 04.02.2025
தினம் செவ்வாய்க்கிழமை
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கம் 06 23 32 73
வெற்றி வாரம் 2537

# உப்பு விலை உயர்ந்தது

கொழும்பு,பெப்.5

சந்தையில் நேற்று 400 கிராம் உப்பு பக்கெற் ஒன்றின் விலை 150 முதல் 160 ரூபா வரை அதிகரித்துக் காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் 1 கிலோகிராம் உப்பு பக்கெற்றுக்கு சந்தையில் தட்டுப்பாடு நிலவுவதாகவும் கூறப்படுகின்றது.

அதேவேளை நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக உப்பு உற்பத்தி கடுமையான வீழ்ச்சியை சந்தித்திருந்த நிலையில் இந்தியாவிலிருந்து உப்பு இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

### தேர்தல் செலவினம்

# சமர்ப்பிக்காதோர் மீது வழக்குகள் தொடுப்பு

கொழும்பு, பெப்.5

தேர்தல் பரப்புரைச் செலவினங்களைச் சமர்ப்பிக்காத ஜனாதிபதி வேட்பாளர்கள் 15 பேருக்கு எதிராகவும் பொதுத்தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள் ஆயிரத்து 64 பேருக்கும் எதிராக வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோது தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க இந்தத் தகவலை வெளியிட்டார்.

சட்டமா அதிபரின் ஆலோசனை பெற்று அவர்களுக்கு எதிராக் வழக்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (எ-இ)

## பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு ஏற்க மறுத்தால் நடவடிக்கை



கொழும்பு. பெப்.5

பொலிஸ் நிலையங்களில் முறைப்பாட்டை ஏற்க மறுக்கும் அதிகாரிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள பதில் பொலிஸ்மா அதிபர், ஒழுக்காற்று நடவடிக்கைக்கு மேலதிகமாக, பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் விதிகளின்படி அத்தகைய அதிகாரிகளுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுப்பதற்கான வாய்ப்பும் உள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

பொலிஸ் நிலையங்களுக்குப் பதிவாகும் முறைப்பாடுகளை பதிவுசெய்து விசாரணை செய்வது பொலிஸ் அதிகாரிகளின் கடமையும் பொறுப்பும் ஆகும் . பொலிஸ் நிலையங்களுக்கு கிடைக்கும் எந்தவொரு முறைப்பாட்டையும் ஏற்றுக்கொள்ளாமல் நிராகரிக்க முடியாது என்றும் பதில் பொலிஸ்மா அதிபர் விடுத்துள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# கொள்கலன் விடுவிப்பு; விசாரிப்பதற்குக் குழு

கொழும்பு, பெப்.5

சுங்கப் பரிசோதனைகள் இன்றி இறக்குமதிக் கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டுள்ளன என்று வெளியான தகவல் தொடர்பில் விசாரிப்பதற்கு நிதியமைச்சால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. திறைசேரியின் பிரதிச் செயலாளர் ஏ.கே. செனவிரத்ன தலைமையில் போக்குவரத்து, பெருந்தெருக்கள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.பி.ஜயசுந்தர, வர்த்தகம் மற்றும் முதலீட்டு கொள்கை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கே.பி.குமார, முகாமைத்துவக் கணக்காய்வு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஏ.பி.குரும்பலப்பிட்டிய, சிரேஷ்ட சுங்கப் பணிப்பாளர் சபுமல் ஜயசுந்தர ஆகியோர் இந்தக் குழுவில் உள்ளடக்கப்பட்டுள்ளனர். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாணயநிதிய ஒப்பந்தச் சிக்கல்கள் மக்களிடம் மறைக்கப்படுகின்றன!

## எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு



**கொழும்பு, பெப்.5**

**உலகின் பல்வேறு நாடுகளால் இணக்கப்பாடு எட்டப்பட்ட நாணய நிதிய ஒப்பந்தங்களை ஆராயும்போது, கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தங்களில் 59 சதவீதம் மீண்டுமொரு கடன் மறுசீரமைக்கு இட்டுச் சென்றுள்ளது. இந்த உண்மைகள் மக்களிடம் மறைக்கப்படுகின்றன-இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கை மூலம் பொருளாதார நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. தற்போதைய அரசாங்கம் முந்தைய அரசாங்கம் இணக்கப்பாடு ஏற்படுத்திய அதே ஒப்பந்தத்தை அதே வழியில் முன்னெடுத்துச் செல்கின்றது.

நாணய நிதியம் வழங்கியுள்ள பல முக்கிய இலக்குகளை நிறைவுசெய்யவேண்டும் என்பதே யதார்த்தமாகும். அவற்றில் விரைவான பொருளாதார வளர்ச்சி மற்றும் உயர் அரசாங்க வருவாயைப் பேணுதல் முக்கியமானதாகும். தவறும் பட்சத்தில் இன்னும் 2 அல்லது 3 வருடங்களில் மற்றொரு கடன் மறுசீரமைப்புத் திட்டத்துக்குச் செல்லநேரிடும். மற்றொரு கடன் மறுசீரமைப்புத் திட்டத்துக்குச் செல்வது மக்களை மேலும் சிக்கலில் தள்ளும் விடயமாகும். இது சவாலானது- என்றார். (எ-இ)

யாழ். - வவுனியா

## சிறைகளிலிருந்து 19 கைதிகள் விடுவிப்பு!

யாழ்ப்பாணம்,பெப்.5

சுதந்திரதினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் யாழ்ப்பாணம், வவுனியா சிறைச்சாலைகளிலிருந்து 19 கைதிகள் நேற்று விடுதலைசெய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்து 17 கைதிகளும் வவுனியா சிறையிலிருந்து இரு கைதிகளுமே விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சிறு குற்றங்களுக்காக குறுகிய-கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டனர். (ச-33-23,18)

## ருமேனிய விசா காலதாமதம்; தெளிவின்மையே காரணம்

கொழும்பு, பெப்.5

ருமேனிய தொழில் விசாக்கள் காலதமதமாவதற்கு உரிய விசா படிவங்கள் ஒழுங்காகப் பூர்த்திசெய்யப்படாமையும் ஆங்கில அறிவு போதாமையுமே காரணம் என ருமேனியத் தூதரக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகமும் ருமேனியத் தூதரகமும் இணைந்து நடத்திய ஊடகவியலாளர் மகாநாட்டிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. 167 வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள் தொழில் விசா விண்ணப்பங்களை அனுப்பியுள்ளன. அவர்களுக்கு தொழில் விசா தொடர்பாகத் தெளிவூட்டும் பொருட்டு பயிற்சிப்பட்டறை ஏற்பாடு செய்யவுள்ளதாகவும் ருமேனியத் தூதரக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ச-22, 6)



## 68 பேருக்கு எதிராக சிவப்பு எச்சரிக்கை!

கொழும்பு, பெப். 5

வெளிநாட்டில் தலைமறைவாகி நாட்டில் திட்டமிட்ட குற்றச் செயல்களை ஒழுங்குபடுத்திய 68 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிராக சர்வதேச சிவப்பு எச்சரிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார். குறித்த சந்தேகநபர்களை நாட்டுக்கு அழைத்து வந்து அவர்களுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கவுள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## ஜப்பான் –இலங்கை இடையே நிதிப்பரிமாற்ற உடன்படிக்கை

ஜப்பான் அரசாங்கம் 300 மில்லியன் ஜென் நிதியுதவி வழங்குவதற்கான பரிமாற்ற ஒப்பந்தத்தை இலங்கை அரசாங்கத்துடன் கையொப்பமிட்டுள்ளது. இந்த மானிய உதவியின் கீழ், ஜப்பானிய நிறுவனங்களால் தயாரிக்கப்படும் 28 உயர்தர குப்பை அகற்றும் இயந்திரங்கள், பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளாட்சி அமைச்சகத்தின் கீழ் உள்ள தேசிய திடக்கழிவு மேலாண்மை ஆதரவு மையம் மூலம் மேற்கு, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு வழங்கப்படவுள்ளது. கழிவு சேகரிப்பு மற்றும் போக்குவரத்துத் திறனை மேம்படுத்துவதையும், சுகாதாரமான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த நிலையான கழிவு மேலாண்மையை உறுதிசெய்வதையும் இந்த திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. (எ-இ)

## குரங்குகள் கணக்கெடுப்பு

நாட்டில் முதல்முறையாக குரங்குகள் கணக்கெடுப்பை அரசாங்கம் முன்னெடுக்கவுள்ளது.

அதன்படி அனைத்து மாவட்டங்களிலும் இம்மாதம் 15 அல்லது 22 ஆம் திகதிகளில் குரங்குகள் கணக்கெடுப்பு இடம்பெறவுள்ளதாக தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் தலைவர் சுனிமல் ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

இந்த கணக்கெடுப்பானது குரங்குகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கும், தென்னைப் பயிர்ச்செய்கைக்கு ஏற்படும் பாதிப்பை குறைப்பதற்கும் வாய்ப்பாக அமையும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)




முல்லைத்தீவில மாவட்டச் செயலர் திறந்துவைச்ச 'ஸ்பா' உள்ள காணிக்கு நடுவால ஒரு பாதை இருக்குது. தியோகுநகரில இருக்கிறவை கரைவலை இழுக்கிறதுக்காக உந்தப் பாதையால கடலுக்குப் போய்வாறவை. ஆனால் தனியார் காணிக்குள்ள இருந்தாலும், ஒரு கிராமத்து மக்களின்ர வாழ்வாதாரத்துக்கு இந்தப் பாதை கட்டாயம் எண்டதால, அந்தக் காணிக்குச் சொந்தமான 'பாதர்மாரும்', இயக்கமும் கதைச்சுப் பேசி அதை பொதுப்பாதையா மாத்தினவை. கிட்டத்தட்ட முப்பது வருசமா அந்தப்பாதை பொதுப்பாவனையில இருந்ததாலையும், காணிக்குச் சொந்தக்காரரா முதல் இருந்த 'பாதர்மார்' சம்மதிச்சதாலையும் பிரதேசசபையும் அதை தன்ர கட்டுப்பாட்டில இருக்கிற பாதை எண்டு வர்த்தமானியிலையும் அறிவிச்சிட்டுது.

இதுக்குப் பிறகு அந்தக் காணியை ஒருத்தர் வாங்கினகையோட, சனங்கள் கடலுக்குப் போய் வந்த பாதையை அடைச்சிட்டார். அது தனியப் பாதை மட்டுமில்லை. ஓர் ஊர்ச் சனத்துக்கே சோறுபோடுற வழி. அதை அடைச்சால் சனங்கள் சும்மாயிருப்பினமோ? அந்தப்பாதைக்கு முன்னால தியோகுநகர்ச் சனங்கள் எல்லாரும் போய் ஆர்ப்பாட்டம் செய்தவை. அவைக்கு சப்போர்ட்டா இப்ப எம்.பி.யா இருக்கிற ரவிகரனும் போய் நிண்டவர். 'இது பிரதேசசபைக்குச் சொந்தமான பாதை. அதால நீங்கள் போய்வரலாம்' எண்டு பிரதேச சபைச் செயலாளரும், பிரதேச செயலகத் திட்டமிடல் அதிகாரியும் சொன்ன பிறகு அந்தப் பாதையால தான் சனங்கள் இப்பவும் போய்வந்துகொண்டிருக்கினம்.

ஆனால், காணிக்காரரோ தாய் உறுதியில அந்தப்பாதை காணிக்காரருக்குச் சொந்தமெண்டு எழுதி இருக்கெண்டும், அத்துமீறி தன்ர காணிக்க பூந்து பாதையை மறிச்சுப் போட்ட வேலியைப் பிடுங்கிப்போட்டினம் எண்டும் வழக்குப் போட்டிட்டினம். அந்த வழக்கு இப்ப நடந்துகொண்டிருக்கு. போன தவணையில அந்தப்பாதை தங்கட கட்டுப்பாட்டில இருக்கிறதால அது பொதுப்பாதை எண்டதுக்கு ஆதாரமா பிரதேசசபைக்காரர் வர்த்தமானி அறிவித்தலையும் கோர்ட்ஸில குடுத்ததால காணியை வாங்கி 'ஸ்பா' கட்டினவர் ஆடிப்போட்டாராம். இனிப்பாதை அவ்வளவுதான் எண்டு நினைச்சாரோ என்னவோ படபடவெண்டு மாவட்டச் செயலரைக் கூப்பிட்டு 'ஸ்பா'வை திறந்துபோட்டார். இந்த வழக்கு நடக்குதெண்டு தெரிஞ்சும், சனத்துக்கு எதிரா நிக்கிற ஓராளின்ர ஸ்பாவை (ஸ்பாவும் சனத்துக்கு கேடுதான்) மாவட்டச் செயலர் ஏன் திறந்துவைச்சார் எண்டது ஒருத்தருக்கும் இன்னும் விளங்கேல்ல.

இதுக்குள்ள இன்னொரு கதையும் உந்த 'ஸ்பா'வைப் பற்றி அடிபடுகுது. சிங்கள ஆக்கள்தான் இப்பிடி ஒரு தமிழரைப் பிடிச்சு, அவரை வைச்சு உந்த ஸ்பாவைக் கட்டி, கொஞ்சநாளைக்கு இயங்கவைச்சிட்டு, பிறகு தாங்கள் வந்து நடத்தப் போயினமாம். கோடரிக்காம்புகள் இருக்கிற வரைக்கும் மரங்களுக்கு ஆபத்துத்தான் கண்டியளோ.

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




**மேடம்:** தந்தை வழியில் ஆதாயம் கிடைக்கும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் சகோதரர் தொடர்பான முக்கிய பொறுப்பு ஒன்றை ஏற்கநேரிடும்.

**இடபம்:** அதிர்ஷ்டகரமான நாளாக இருக்கும். கணவன் மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு வெளியூரில் இருக்கும் ஆலயங்களைத் தரிசிக்கும் வாய்ப்பு உண்டாகும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபட வேண்டாம். குடும்பத்தில் மற்றவர்களை அனுசரித்துச் செல்லவும். வாகனத்தில் செல்லும் போது எச்சரிக்கை தேவை. எதிர்பாராத செலவுகளால் சிலர் கடன்வாங்கவும் நேரிடும்.

**கடகம்:** தாய்மாமன் வகையில் எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். மாலையில் உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உண்டாகும்.

**சிம்மம்:** மனதில் தைரியமும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். முக்கிய பிரமுகர்களின் அறிமுகம் கிடைப்பதுடன், அவர்களால் ஆதாயமும் கிடைக்கும்.

**கன்னி:** வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால் உணவு விஷயத்தில் கவனம் தேவை. பிள்ளைகளின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள். சிலருக்குத் திடீர் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். வாழ்க்கைத் துணையின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். துணிச்சலாக சில முடிவுகளை எடுப்பீர்கள்.

**விருச்சிகம்:** குடும்ப உறுப்பினர்கள் ஆதரவாக இருப்பார்கள். கணவன் மனைவிக்கி டையே சிறுசிறு கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடும் என்பதால் ஒருவரையொருவர் அனு சரித்துச் செல்வது நல்லது.

**தனுசு:** மனதில் சஞ்சலம் ஏற்படும். வீண் செலவுகளால் கையிருப்புக் கரையும். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். வாழ்க்கைத் துணை உங்கள் முயற்சிகளுக்கு ஒத்து ழைப்புத் தருவார்.

**மகரம்:** மனதில் உற்சாகம் உண்டாகும். சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மாலையில் உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படக்கூடும். புதிய டிசைனில் ஆடைகள் வாங்கி மகிழ்வீர்கள்.

**கும்பம்:** திடீர் செலவுகள் ஏற்படும். தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். பிற்பகலுக்கு மேல் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மீனம்:** உற்சாகமான நாள். வாழ்க்கைத்துணை வழியில் சுபச்செலவுகள் ஏற்படும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உங்கள் தேவையை அறிந்து மற்றவர்கள் உதவி செய்வார்கள்.

# கருவிகள் முத்திரையிடல் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், பெப். 5

நிறுத்தல், அளத்தல் கருவிகளுக்கு முத்திரையிடும் நடமாடும் சேவை 6,7,10,11 ஆம் திகதிகளில் சாவகச்சேரி நகரசபை அலுவலகத்திலும், 13,14,17 ஆம் திகதிகளில் சாவகச்சேரிப் பிரதேசசபையின் பொதுமண்டபத்திலும், 18, 19 ஆம் திகதிகளில் கைதடி தெற்கு சனசமூக நிலையத்திலும் காலை 9 மணி முதல் மதியம் ஒரு மணி வரை நடைபெறவுள்ளது.

இதில் சாவகச்சேரி பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கிவரும் வர்த்தக நிலைய உரிமையாளர்கள் கருவிகளை முத்திரையிட்டுக்கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-22, 159,28)



தாவடி ஸ்ரீ அம்பலவாண வேதவிநாயகர் கோவில் மஹா கும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி விழா பெருமளவான அடியவர்களின் பங்கேற்புடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-41-66)

# தரிசன யாத்திரை

யாழ்ப்பாணம், பெப்.5

இலங்கை முதல் உதவிச்சங்க இந்துசமயத் தொண்டர் சபையின் ஏற்பாட்டில் இலங்கையில் சாந்தி, சமாதானம் வேண்டி புனித திருத்தலத் தரிசன யாத்திரை எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 6.30மணிக்கு இடம்பெறவுள்ளது.

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து இந்தப் பாதயாத்திரை ஆரம்பமாகி பிரதான வீதி ஓரமாக அமைந்துள்ள பல்வேறு ஆலயங்களைத் தரிசித்தவாறு காலிச் சிவன் ஆலயத்தைச் சென்றடைந்து அங்கு திருவாசக முற்றோதல் நிகழ்வு நடைபெறும்.

மேற்படி தரிசன யாத்திரையில் கலந்துகொள்ள விரும்பும் அடியவர்கள் 0779236552 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு இலங்கை முதல் உதவிச்சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (ச-41-66)

# அடிக்கல் நடுகை

யாழ்ப்பாணம், பெப்.5

மட்டுவில் வடக்கு தூய லூர்த்து அன்னை ஆலயத்துக்கான புதிய கட்டடத்தொகுதியின் நிர்மாணிப்புக்கான அடிக்கல் நடுகை செய்யும் நிகழ்வு ஆலய முன்றலில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

ஆலயத்தின் பங்குத்தந்தை அருட்திரு ஞானேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அடிக்கல்லை மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு பி.ஜே.ஜெயரட்ணம் அடிகளார் நடுகை செய்தார். (ச- 25, 131)

# யாழ்.பாடி மலருக்கு ஆக்கங்கள் கோரல்

யாழ்ப்பாணம், பெப்.5

யாழ். பிரதேச கலாசாரப்பேரவையினால் வெளியிடப்படவுள்ள யாழ் . பாடி- 9 மலர் வெளியீட்டுக்காக கவிதை, சிறுகதை, நூல் விமர்சனம், சிறுவர் இலக்கியம், நாட்டாரியல், மருத்துவம், வணிகம், உளவியல், நாடக எழுத்துரு, ஆய்வு, சூழலியல், சமூகவியல், கிராமியக்கலைகள், கலை மரபும் பண்பாடும், அறிவியல் போன்ற தலைப்புக்களிலான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

கவிதை தவிர்ந்த ஏனைய ஆக்கங்கள் யாவும் ஏ4 தாளின் இருபக்கங்களுக்கு மேற்பட்டவையாக இருத்தல் வேண்டும். சுய படைப்பாக அமைவதோடு ஏற்கனவே வெளிவந்ததாக இருக்கக்கூடாது.

கடிதவுறையின் இடதுபக்க மூலையில் "யாழ் பாடி 09 பிரதேச மலர்" எனக் குறிப்பிடவும். முழுப்பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை இணைத்து ஆக்கத்தைப் பிரதேச செயலாளர், பிரதேச செயலகம் யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எதிர்வரும் 20ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-41-25)

# விருதுகளுக்கான விண்ணப்பங்கள்

யாழ்ப்பாணம், பெப்.5

பண்பாட்டு அலுவல் அலகின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண பண்பாட்டுப் பெருவிழாவில் வழங்கப்படவுள்ள கலைக்குரிசில், இளங்கலைஞர் விருதுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் தங்கள் பிரதேச கலாசார உத்தியோகத்தரைத் தொடர்பு கொண்டு எதிர்வரும் மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் பண்பாட்டலுவல்கள் அலகுக்கு கிடைக்கக்கூடியவாறு விண்ணப்பிக்கலாம்.

மேலதிக தகவல்களுக்கு 0212054105 எனும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்பு கொள்ளவும். அல்லது விண்ணப்பப் படிவங்களை எனும் WWW.NP.GOV.LK /WWW.EDUMIN.NP.GOV.LK இணையத்தளங்களின் மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம். (ச-41-25)



சாவகச்சேரி சப்பச்சி மாவடி விநாயகர் கோவில் மஹா கும்பாபிஷேகம் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிவஸ்ரீ குமார ஸ்ரீகாந்தக் குருக்கள் தலைமையில் இடம்பெற்றது. (ச-25,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் : 03.02.1944 மறைவு : 06.01.2025

அமரர்

### திருமதி இரத்தினசபாபதி மங்கையற்கரசி

கலங்கரை விளக்காக கண்ணுக்குள் நின்றீர்
வலக்கரமாகி எம் வாழ்வினைச் சுமந்தீர்
நலம்பல தந்தெம்மை வலம் வந்து நின்றீர்
துலங்கிய உம்பணி துயரின்றி வாழ்ந்தநீர்
பலம் மிகு ஆத்மா புரமனை அடைந்திட
குலவிளக்கே நீர் அணைந்தது ஏனோ
அற்றுவிட்டதோ உம் அழகு
நொந்துவிட்டதே எம் மனது

கதிரமலை வீதி,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

மலர்வு 20.11.1945 உதிர்வு 04.02.2025



### திருமதி மங்களேஸ்வரி ஜெயரத்தினம்

56 சிவன் பண்ணை வீதி கொட்டடி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், பேச்சியம்மன் கோவிலடி கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மங்களேஸ்வரி ஜெயரத்தினம் அவர்கள் நேற்று (04.02.2025) அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அப்புத்துரை-அமராவதி தம்பதியரின் இரண்டாவது மகளும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு-இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஜெயரத்தினம் அவர்களின் மனைவியும் ஜெ.நிஷாகர் (ஆசிரிய ஆலோசகர் வலயக் கல்வி அலுவலகம் கிளிநொச்சி தெற்கு), ஜெ.நிரஷா ஆசிரியர் (யா/இடைக்காடு மகாவித்தியாலயம்) அவர்களின் அன்புத் தாயாரும் பஜிதா (பொலிகண்டி) அவர்களின் அன்பு மாமியாரும், அக்ஷஜா, அக்சஜன், அஷ்விஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் அ.கதிர்காமநாதன், ப.விமலநாயகி, இரா.மகாதேவி (இந்தியா) அ.பத்மநாதன் (ஜேர்மனி), அ.தர்மசீலன் (லண்டன்) காலஞ்சென்ற அ.தில்லைநாதன் (ஜேர்மனி) காலஞ்சென்ற அ.ஸ்ரீஸ்கந்தராஜா (ஜேர்மனி), அ.ஜெயசீலன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.02.2025) புதன்கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை கிழக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

பழைய தபாற்கந்தோர்
அருகாமை
கோப்பாய் தெற்கு

தகவல்:
குடும்பத்தினர்.
077 729 1665

(CS 2445) V-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 04.11.1975 மறைவு 04.02.2025



### அமரர் முகுந்தன் திலகவதி

கைதடியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட முகுந்தன் திலகவதி அவர்கள் நேற்று (04.02.2025) செவ்வாய்க்கிழமை இறைவனடி எய்தியுள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் நாகம்மா தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற முகுந்தனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வர்களான நடேசன்-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மூத்த மருமகளும், திலகேஸ்வரி அவர்களின் அக்காவும் ரஜீபன், ரட்சிகா, ராகீசன் (ஜேர்மனி), ஆகியோரின் அன்புத் தாயாரும் திருவேணி (ஆசிரியர்-யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), இரவீந்திரன் (நோர்வே), கௌரிவேணி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.02.2025) வியாழக்கிழமை முற்பகல் 08.00 மணியளவில் கைதடி தெற்கு கைதடியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக ஊரியான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
077 653 1627
077 523 5574
075 653 1628 Whats App

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 21.04.1956 மறைவு 04.02.2025



### சண்முகம் காசிப்பிள்ளை

(உரிமையாளர்- வேல்முருகன் விநியோகஸ்தர், மட்டக்களப்பு)
Unilever Srilanka, Pyramid Wilmer (pvt) Ltd, Flora Food Group)

காரைநகர் வளுப்போடையைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் காசிப்பிள்ளை அவர்கள் நேற்று (04.02.2025) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் மற்றும் கமலாம்பிகை தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான தில்லைநாதன் நவரத்தினபூபதி தம்பதியரின் அன்பு மருமகனும் புஸ்பவதியின் (ஓய்வுநிலை ஆசிரியர்) பாசமிகு கணவரும், சதீசன், திவ்யா, வித்யா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவபாதசுந்தரம், ராஜேஸ்வரி, சுப்ரமணியம், யோகேஸ்வரி, ஞானசம்பந்தன், காலஞ்சென்ற கெங்காதரன் மற்றும் வசந்தகுமாரி, வசந்தமலர், செல்வராசா, இராசகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆரூரன், தீபிகா, ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆதிரா, ஆதிரன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.02.2025) வியாழக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மட்டக்களப்பு கள்ளியங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

290/1 திருமலை வீதி
மட்டக்களப்பு.

தகவல்:
குடும்பத்தினர்.
077 167 4394

(CS 57420) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் கரிநாள் பதிவுகள்




கிளிநொச்சியில்...







யாழ்.பல்கலையில்...




நல்லூரில்...









மட்டக்களப்பில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

நாளொரு நல்வார்த்தை

ஒரு மணிநேரத்தை வீணடிக்கத் துணிந்த ஒரு மனிதன் வாழ்க்கையின் மதிப்பை அறியாதவன்.

—சார்ள்ஸ் டார்வின்—

## உண்மை - நேர்மை - அஞ்சாமை

# தமிழ்த் தேசியகீதத்தால் என்ன லாபம்?

இலங்கையின் 77ஆவது சுதந்திரதின நிகழ்வுகளில் நாட்டின் தேசியகீதம் தமிழ் மொழியில் இசைக்கப்பட்டிருக்கின்றது. நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் தேசியகீதம் தமிழில் இசைக்கப்பட்டிருந்த நிலையில், ஜனாதிபதியாக கோத்தாபய ராஜபக்ச தெரிவாகியபின்னர் தமிழ் மொழியில் நாட்டின் தேசியகீதம் இசைக்கப்படுவது நிறுத்தப்பட்டிருந்தது. இப்போது அநுரகுமார திஸாநாயக்க அரசாங்கம் ஆட்சிக்கு வந்திருக்கும் நிலையில், சுதந்திர தின நிகழ்வில் தமிழ்மொழிக்கு இடம்கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் இலங்கையில் அடுத்தடுத்துவரும் ஆட்சியில், தமிழ் மொழிக்கு என்ன நடக்கும் என்பது ஆண்டவனுக்கே வெளிச்சம் என்பதுதான் உண்மை நிலைமை.

நாட்டின் சுதந்திரதின நிகழ்வில் அரசகரும மொழியான தமிழ் மொழிக்கு இடம்கொடுக்கப்பட்டுள்ளமையே ஒரு பெரும் விடயமாகக் கருதிப் பேசப்படுகின்றது எனில், இந்த நாட்டில் தமிழ் மக்கள் இப்போது எந்த நிலைமையில் உள்ளனர் என்பதைப் புரிந்துகொண்டு தமிழ் மக்களின் மனக்கிடக்கைகளை உள்வாங்கிச் செயற்பட வேண்டும். நாடாளுமன்றப் பெரும்பான்மையுடன் ஆட்சிப்பீடமேறியிருக்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நாட்டின் சிறுபான்மை மக்களின் - தமிழ் மக்களின் எதிர்பார்ப்பைப் புரிந்துகொள்ளவேண்டும். கடந்தகாலத்தில் நாட்டை ஆட்சி செய்து குட்டிச்சுவராக்கிய அரசியல் தலைமைகளின் வழியில் அநுரகுமார திஸாநாயக்கவும் பயணிக்க முயலக் கூடாது.

நாடு 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்தாலும், தமிழ் மக்கள் இன்றுவரையில் சுதந்திரத்தை உணரவில்லை என்பதுதான் யதார்த்த நிலைமை. இலங்கை ஒரு பௌத்த நாடு என்ற மேலாதிக்கச் சிந்தனையால் தமிழ் மக்கள் மீது இன்றுவரை கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள நேரடி, மறைமுக இன, மத, மொழி ரீதியான அடக்குமுறைகளே, இலங்கை எம் நாடு என்ற மனப்போக்கில் இருந்து தமிழ் மக்களை அந்நியப்படுத்தியிருக்கிறது. இதைச் சரி செய்ய வேண்டிய கடந்தகால ஆட்சியாளர்கள் அந்த விரிசலுக்குத் தூபமிட்டு அதை இன்னும் பெரிதாக்கத்தான் உழைத்தார்களே தவிர, தமிழ் மக்களின் நியாயமான எண்ணங்களைப் புரிந்துகொள்ள முயற்சிக்கவில்லை. தமிழ் மக்களின் தாயகப் பகுதியான நாட்டின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரச இயந்திரத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் பௌத்தமயமாக்கல், இனப்பரம்பலை மாற்றியமைக்கும் மறைமுகச் செயற்பாடுகள், அரச திணைக்களங்களினதும், முப்படைகளினதும் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படும் காணி அபகரிப்புகள் என இன்றுவரையில் தமிழ் மக்களின் இருப்புக்கு எதிரான நடவடிக்கைகள் என்பன முழுவீச்சில் முன்னெடுக்கப்படுகின்ற நிலையில், நாட்டின் சுதந்திரதின நிகழ்வில் தமிழ் மொழியில் தேசியகீதம் இசைக்கப்படுவதால் எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை.

பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியமைத்திருக்கும் அநுரகுமார திஸாநாயக்க தமிழ் மக்கள் அனுபவிக்கும் நேரடி, மறைமுக அடக்குமுறைகளைப் புரிந்துகொண்டு, நாட்டில் புரையோடிப்போயிக்கும் இனப்பிரச்சினைக்குத் தீர்வைக்காணவேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு. அந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்கான பலத்துடன் இருக்கும் அநுரகுமார திஸாநாயக்க அரசாங்கம், அரசியல் நாடகங்களை விடுத்து, காத்திரமான செயற்பாடுகளுக்குள் நுழையவேண்டும் என்பதே அவர்களின் கோரிக்கை. அது நடக்கும் வரையில் தேசியகீதம் சிங்களத்தில் பாடப்பட்டாலும், தமிழில் பாடப்பட்டாலும் தமிழ் மக்களின் மனங்களில் அது ஒட்டாது என்பதும், அதனால் எந்தவொரு நன்மையும் விளையப்போவதில்லை என்பதும்தான் உண்மை.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




# டிஜிற்றல் கொடுப்பனவுமுறை வெள்ளிக்கிழமை அறிமுகம்

கொழும்பு,பெப்.5

**வெளிப்படைத்தன்மையாக பரிமாற்றங்களைப் பேணுவதற்காக டிஜிற்றல் கொடுப்பனவு முறை நாளைமறுதினம் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.**

இதன்மூலம் அரச நிறுவனங்களின் பணப்பரிமாற்றச் செலவுகளும் குறைக்கப்படும் என ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் சுபாஷ் றொஷான் கமகே தெரிவித்துள்ளார். அத்துடன் வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் டிஜிற்றல் கொடுப்பனவுமுறை மூலம் தமது பிறப்பு, இறப்பு, திருமணச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

வருடாந்தம் நாணயத்தாள் அச்சிடும் செலவு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1.5% ஆகக் காணப்படுகிறது.

இந்தச் செலவையும் இதனூடாக நிறுத்தலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-33-6)

# சமூக ஊடகக் குற்றங்கள் 1,600 முறைப்பாடுகள்!

கொழும்பு, பெப். 05

2024 ஆம் ஆண்டு சமூக ஊடகங்கள் தொடர்பாக 1600 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என இணையக் குற்றங்கள் தொடர்பான அவசர உதவிப்பிரிவு பொறியியலாளர் சாருக டமன்பொல தெரிவித்துள்ளார்.

மெட்டா (முகநூல், எக்ஸ் போன்றன) தொடர்பாக ஆயிரம் முறைப்பாடுகளும் வாட்ஸ்அப் தொடர்பாக 600 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன. போலியான தகவல்கள் மூலம் மேற்கொள்ளப்படும் மோசடிகள் தொடர்பாகவே பெரும்பாலான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-22, 6)

## இந்த வாரத்துக்குள் நெல்லுக்கு கட்டுப்பாட்டு விலை

கொழும்பு, பெப்.5

நெல்லுக்கான கட்டுப்பாட்டு விலை இந்த வாரத்துக்குள்ள நிர்ணயிக்கப்படும் என்று விவசாயப் பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

நெல் கொள்வனவுக்காக திறைசேரியிடமிருந்து 500 மில்லியன் ரூபா பெறப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

## இளைஞர் சேவைகள் மன்றத்துக்கு புதிய தலைவர்

கொழும்பு, பெப். 5

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் புதிய தலைவராகச் சட்டத்தரணி சுபுன் விஜேரத்ன நேற்றுத் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

முன்னதாக தலைவர் பதவியை வகித்த சட்டத்தரணி சிந்தக ஹேவாபதிரன பதவி விலகியதை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளார். (ச-இ)

# 100 ஆக மட்டுப்படுத்தப்பட்ட வெளிநாட்டுத் தத்தெடுப்புகள்

கொழும்பு, பெப்.5

இந்த ஆண்டில் வெளிநாட்டுத் தத்தெடுப்புக்களை 100 ஆக மட்டுப்படுத்தும் வர்த்தமானி ஒன்று அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது.

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் இந்த அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் வெளிநாட்டினரால் குழந்தைகளைத் தத்தெடுப்பது, குழந்தைகள் தத்தெடுப்புக் கட்டளைச்சட்டத்தால் நிர்வகிக்கப்படுகின்றது. குழந்தையின் நலன் மற்றும் இலங்கைச் சட்டங்களுடன் இணங்குவதை உறுதிசெய்வதற்காக நீண்ட கட்டமைக்கப்பட்ட சட்டச் செயல்முறையை இது உள்ளடக்கியுள்ளது. ஒவ்வொரு ஆண்டிலும் அனுமதிக்கக்கூடிய அதிகபட்ச தத்தெடுப்புக்களின் எண்ணிக்கை விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரால் வர்த்தமானியில் வெளியிடப்படும். இந்த ஆண்டுக்கான வர்த்தமானி அறிவிப்பு அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது. (எ-6)

நாளை

வியாழக்கிழமை - தை - 23

06.01.2025

சுபநேரம் : 08.05 - 09.35
ராகுகாலம் : 05.05 - 03.35

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கலைஞர் விருதுக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ். பிரதேச கலாசாரப் பேரவையினால் கலைத்துறைக்கு ஆற்றிய சேவைகளுக்காக வழங்கப்படுகின்ற "இளங்கலைஞர் விருதுக்கு" கவிதை, சிறுகதை, நாவல், நடனம், ஓவியம், சிற்பம், நாடகம். குறும்படத்துறை, இசை, வாத்தியக்கலை, கூத்து, கிராமியக்கலைகள், ஒப்பனைக்கலை, வாத்தியங்கள் உருவாக்கம் ஆகிய துறைகளில் யாழ். பிரதேச செயலகப்பிரிவில் பணியாற்றிய கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஏற்கனவே இளங்கலைஞருக்கான சான்றிதழ், விருதினை பெற்றுக்கொள்ளாத 18 தொடக்கம் 40வயதுக்குட்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பப்படிவங்களை யாழ். பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்று பூரணப்படுத்தி உரிய கலைத்துறையினைச் சான்றுபடுத்தும் ஆவணப்பிரதிகளுடன் எதிர்வரும் 20ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலாளர் எஸ். சுதர்சன் தெரிவித்துள்ளார். (ச-41-25)

## இராணுவ ஆக்கிரமிப்பால்

# கிளிநொச்சி. ம.வி. மாணவர்கள் மைதானம் செல்வதில் அவதி!



**கிளிநொச்சி, பெப். 5**

**கிளிநொச்சி மகாவித்தியாலயத்துக்கு முன்பாக 50 மீற்றர் தூரத்திலுள்ள மைதானத்துக்குச் செல்லும் பாதை இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ளதால் மாணவர்கள் 100 கிலோமீற்றர் வரை நடந்தே சென்று மைதானத்தை அடைகின்றனர் என்று பாடசாலைச் சமூகம் விசனம் தெரிவித்துள்ளது.**

மாணவர்கள் பாடசாலையின் நிகழ்வுகளுக்கு மைதானத்துக்குச் செல்லவேண்டுமாயின் பாடசாலையின் வீதிக்கு வருகைதந்து அங்கிருந்து ஏ -9 பிரதான வீதி வழியாக மத்திய விளையாட்டு மைதானத்தை ஊடறுத்து கிளிநொச்சி மகா வித்தியாலய மைதானத்துக்குச் செல்ல வேண்டியுள்ளது. இதனால் மாணவர்கள் மைதானத்துக்குச் சென்று வருவதிலேயே களைப்புற்று சோர்வடைகின்றனர். மைதானத்துக்குச் செல்லும் பாதையை இராணுவத்தினர் ஆக்கிரமித்து வைத்துள்ளனரென்பதால் மாணவர்களுக்கு இந்த அவலநிலை ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து நீண்டகாலமாக பல்வேறு தரப்பினர்களிடமும் கோரிக்கை விடுத்தபோதி லும் இதுவரை குறித்த பாதையை இராணுவம் விடுவிக்கவில்லை. எனவே புதிய அரசு இந்த விடயத்தைக் கவனத்தில் எடுத்து மாணவர்களின் நன்மை கருதி குறித்த பாதையை இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பாடசாலைச் சமூகம் கோரியுள்ளது.

(ச-214)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



08.01.2025 அன்று BMICH ல்
BSc பட்டம் பெற்ற எமது சக ஆசிரியர்

திருமதி
**துர்சிகா சுரேஸ்**

அவர்களுக்கு ஆசிரியர் நலன்புரிக் கழகம் சார்பாக மனமார்ந்த வாழ்த்துக்கள். மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்.

Congratulations

வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ வரணி மத்திய கல்லூரி

(CR/44248) J-1

## தைப்பூசம்

அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோயில்
உலகப் பெருமஞ்சத்திருவிழா



## பால்குடப்பவனி

**காலம்: 11.02.2025 செவ்வாய்க்கிழமை**

- காலை 6.00 மணியளவில் மருதனார்மடம் பல்லப்ப வைரவர் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகும்.
- தைப்பூச தினத்தன்று யாழ்குடா நாட்டின் பல பகுதிகளிலும் இருந்து இணுவில் கந்தன் ஆலயத்திற்கு வந்து பெருந்தொகையான பக்தர்கள் பால்குடம் எடுப்பது வழமை.
- பால்.குடம் என்பன ஆலயத்தில் ஒழுங்கு செய்யபட்டுள்ளது ஒரு பால் குட பற்றுச்சீட்டு 400/=.
- இணுவில் கந்தன் ஆலயத்தில் 10.02.2025 திங்கட்கிழமைக்கு முன் தினமும் காலை 9.00-11-00 வரை. மாலை 4.30-6.00 மணிவரை பதிவுகளை மேற்கொள்ளலாம்.

## மாபெரும் பொங்கல்

- காலை 9.00 - மாலை 2.00 மணிவரை நடைபெறும்.
- முருகன் அடியவர்கள் அனைவரும் நிகழ்வில் பங்குபற்றி சுவாமியின் இஸ்ட சித்திகளை பெறுவீர்களாக.

தைப்பூச பெருமஞ்ச கலைபண்பாட்டு மன்றம்
இணுவில் கந்தசுவாமி கோயில்

(CS/29727A) J-1

## 60வது அகவை பூர்த்தி

### மணிவிழா வாழ்த்து

திரு. குழந்தைவேலு கமலநாதன்
KULANTHAIVELU KAMALANATHAN

சேவை காலம்
- 1994ம் ஆண்டு ஆனி - 01.08.2005 - சித்த மருத்துவர், சாவகச்சேரி பிரதேச சபை
- 01.08.2005 - 2006 ஆனி மாதம் - சாதாரண தொழிலாளி, கிராமிய சித்த வைத்தியசாலை, கரவெட்டி
- 2007 ம் ஆண்டு - சாதாரண தொழிலாளி, சங்கானை மத்திய மருந்தகம்
- 2008 ம் ஆண்டு - சாதாரண தொழிலாளி, கிராமிய சித்த மருத்துவமனை, பண்டத்தரிப்பு
- 2009 ஆம் ஆண்டு - 2010 ஆம் ஆண்டு வரை - பரிசாரகர் ஊரெழு மத்திய மருந்தகம்
- 2010ம் ஆண்டு - 2015 ஆம் ஆண்டு வரை - பரிசாரகர் மாவட்ட சித்த வைத்தியசாலை யாழ்ப்பாணம்.
- 2015 ஆம் ஆண்டு - 2019 ஆம் ஆண்டு வரை மர்த்தனவியலாளர் சித்த ஆதார வைத்தியசாலை கிளிநொச்சி
- 2019 ஆம் ஆண்டு - 2025 ஆம் ஆண்டு வரை மர்த்தனவியலாளர் கிராமிய சித்த வைத்தியசாலை கொடிகாமம்



வெண்ணிலவு விண்ணிற்கு அழகு
விடிவெள்ளி வானிற்கு அழகு
கள்ளமில்லா உங்கள் அன்பே
உங்கள் உள்ளத்திற்கு அழகு

நோயாளியுடன் இருந்து-நோய்
பறக்க பணி செய்தாய்
தாயாக நீ இருந்து - தரமான
சேவைகள் செய்தாய்

சித்த மருத்துவத்தில்
மருத்துவராக நீங்கள் செய்த
சேவைகள் அனைத்தும்
கமலநாதனின் பெயர் சொல்லும்

மணிவிழா காணும் நாயகன்
நீங்கள் குடும்பத்தாருடன்
அமைதியாக பல்லாண்டு காலம்
வாழ வாழ்த்தி நிற்கின்றோம்.

(CR/44246) J-1

பாராட்டி வாழ்த்துவோர்:-
வடமாகாண சித்த கனிஸ்ட ஊழியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இராணுவத்திடம் சரணடைந்த

# புலி உறுப்பினர்கள் பட்டியலை இலங்கையிடம் பெற்றுத்தருக

### ஐ.நா.விடம் உருத்திரகுமாரன் கோரிக்கை

கொழும்பு, பெப். 5

இறுதிப் போரின்போது இராணுவத்திடம் சரணடைந்த புலி உறுப்பினர்களின் பட்டியலை இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெற்றுத்தருமாறு ஐ.நா.செயற்குழுவிடம் நாடு கடந்த தமிழீழ பிரதமர் உருத்திரகுமாரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஐ.நா.செயற்குழுவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அருட்தந்தை ஒருவர் உட்பட இராணுவத்திடம் சரணடைந்த புலி உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு என்ன நடந்தது? என்பது இதுவரை தெரியாது என சர்வதேச மன்னிப்புச்சபைச் செயலாளர் நாயகம் அக்னஸ் கால்மார்ட் தெரிவித்துள்ளார்.

குடும்பமாக சரணடைந்த விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் குடும்பமாகக் காணாமலாக்கப்பட்டுள்ளனர். நான்கு மாத, பத்து மாத குழந்தைகளின் படங்களைக்கூட நான் பார்த்துள்ளேன். இந்தக்குழந்தைகளுக்கு என்ன நடந்தது என்று கேட்க வேண்டிய தேவை இலங்கைக்காயர்களுக்கு உள்ளது.

தனிநபர்கள் மட்டுமன்றி சுயநிர்ணயத்திற்காக குரல் கொடுத்தவர்களும் காணமலாக்கப்பட்டிருக்கின்றனர்.

இனப்படுகொலை காரணமாகக் காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் உளரீதியான தாக்கங்களுக்கு உட்பட்டிருப்பதாக பொஸ்னிய படுகொலை தொடர்பில் சர்வதேச நீதிமன்றில் வாதாடிய பிலிப் சாண்ட்ஸ் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டுச் சட்டங்களின் கீழ் விசாரணைகளை முன்னெடுக்கப்போவதாக இலங்கை அரசாங்கம் கூறுகிறது. ஆனால் ஐ.நா. சாசனத்தின் 31ஆவது பிரிவின் கீழ் பாதிக்கப்பட்டவர்கள் ஐ.நா. விசாரணையைக் கோருவதற்கு அவர்களுக்கு உரிமையுள்ளது.

காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவோ நீதியின் முன்நிறுத்தப்படவோ இல்லை. காரணம் இலங்கை இனவாத அரசியலில் மூழ்கியுள்ளது. இதுவரை காலமும் அர்த்தமுள்ள நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்பதையே இது காட்டுகிறது.

இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பதவிக்கு வந்துள்ளது. ஆனால் காணாமலாக்கப்பட்டவர்களின் தாய்மார் பெப்ரவரி 4ம் திகதி நடைபெறவுள்ள இலங்கையின் சுதந்திரதினத்தை கரிநாளாகப் பிரகடனம் செய்துள்ளனர் - என்றுள்ளது.

அத்துடன் "இலங்கையில் காணாமலாக்கப்பட்ட குழந்தைகள்" என்ற நூலின் பிரதியையும் தனது கடிதத்துடன் உருத்திரகுமாரன் இணைத்து அனுப்பியுள்ளார். (ச-6)




# இணைந்த சேவைப் பிரச்சினை வெகுவிரைவில் தீர்க்கப்படும்!

### ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.5

நீண்டகாலமாக உள்ள இணைந்த நேர அட்டவணைச் சேவைப் பிரச்சினை வெகுவிரைவில் முடிவுக்குக் கொண்டுவரப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்தவாரம் யாழ்ப்பாணம் வந்திருந்தபோதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஓர் இடத்துக்குச் செல்வதற்கு இரு பஸ் சேவைகள் முன்னெடுக்கப்பட வேண்டிய தேவை தொடர்பாக ஆராயவேண்டும்.

இதுதொடர்பாக இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ் சேவைகளுடன் பேச்சு நடத்தி வருகின்றோம். வெகுவிரைவில் இரு சேவைகளையும் இணைத்து ஒரே நேரத்தில் சேவையில் ஈடுபடுவதற்கான நடவடிக்கைகளை எடுப்போம் என்று அவர் தெரிவித்துள்ளார். (ஏ-125)

# வாகனங்கள் விலையேறும்

கொழும்பு, பெப். 5

இலங்கையில் முச்சக்கரவண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களின் விலை அதிகரிக்கும் என்று இலங்கை மோட்டார் வாகன வர்த்தகர்கள் சங்கத்தின் தலைவர் ஆண்ட்ரூ பெரேரா தெரிவித்துள்ளார்.

புதிய வரி திருத்தத்துடன் புதிதாக இறக்குமதி செய்யப்படும் முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களின் விலையில் பெரும் அதிகரிப்பைக் காணமுடியும்.

அதன்படி புதிதாக இறக்குமதி செய்யப்படும் மோட்டார் சைக்கிளின் விலை 7 இலட்சம் ரூபாவாக அதிகரிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



# கொள்கலன்கள் நெரிசலுக்கு குறுங்காலத் தீர்வு

கொழும்பு, பெப்.5

கொழும்புத் துறைமுகத்தில் ஏற்பட்டுள்ள கொள்கலன்களின் நெரிசலுக்கு குறுகியகாலத் தீர்வு குறித்து ஆராயப்பட்டுள்ளது.

அதன்படி, இது தொடர்பாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நியமித்த அமைச்சரவை உப குழுவின் தீர்மானத்துக்கு இணங்க துறைமுகத்துக்கு அண்மையில் உள்ள ப்ளூமெண்டல் நிலப்பகுதியில் ஐந்து ஏக்கரில் 2.5 ஏக்கர் பகுதியை தற்காலிகமாக சுங்கத்துக்கு வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தபால்தலை போல இருங்கள். நீங்கள் ஒன்றை அடையும் வரை, ஒரு விஷயத்தில் ஒட்டிக்கொள்ளுங்கள்.

- ஜோஷ் பில்லிங்ஸ்

புதன் பொய்கை

05.02.2025
புதன்கிழமை

# குற்றங்கள்!

## சமூக மேம்பாட்டின் பேரழிவுகரம்!



ஜெயராசா கபில்ராஜ்

மனிதன் தோன்றி வளர்ந்த காலம் முதலே குற்றம் என்பது தோன்றி விட்டது. குற்றம் என்பது ஒரு செயலாகவும் இருக்கலாம். அல்லது செயலைச் செய்ய தவறியதாகவும் இருக்கலாம். மேற்படி இரண்டும் பொதுச்சட்டங்களுக்கு எதிரானவையாக இருக்கும். இதனை நேரடியாகச் செய்வதும் செய்யத் தூண்டுவதும் குற்றம் எனப்படும். குற்றம் என்பது விதிகளையோ அல்லது சட்டத்தையோ மீறிச் செய்யப்படும் செயலாகும். இத்தகைய செயல் அதிகாரத்தில் உள்ளவர்களால் தண்டனைக்கு (சட்ட மன்றம் போன்ற அமைப்புகளால்) உட்படுத்தப்படலாம். அல்லது எச்சரிக்கை விடுக்கப்படலாம். குற்றம் என்ற சொல் சட்டத்தில் தனிப்பொருள் உடையது. சட்டத்தால் விலக்கப்பட்ட செயல், சட்டப்படி தண்டனைக்குரிய செயல்களே குற்றங்கள் ஆகின்றன. குற்றம் செய்தவர்கள் பல வேளைகளில் சமூகத்தாலும் சிலவேளைகளில் சட்டத்தாலும் தண்டிக்கப்படுகின்றார்கள். இன்னும் தெளிவாகக் கூறுவோமாயின் சமூகத்தால் சில விடயங்கள் குற்றமாகவும் பிழையானதாகும் கருதப்படுகின்றன. ஆனால் அவை அனைத்துமே சட்டத்தால் குற்றமாகக் கருதப்படுவதில்லை.

### குற்றம் என்றால் என்ன?

குற்றம் என்றால் என்ன என்ற கேள்விக்கு இற்றை வரைக்கும் சரியான வரைவிலக்கணம் இல்லாவிட்டாலும் அதனை ஓரளவுக்கு விவரிக்கலாம். சமூகமானது பல விடயங்களைக் குற்றமாகக் கருதுகின்றது. அவ்வாறான விடயங்கள் சமூகத்துக்குச் சமூகம் மாறுவதும் உண்டு. உதாரணமாக மேலைத்தேய சமூகங்களில் குற்றமற்றதாகப் பார்க்கப்படும் விடயங்கள் கீழைத்தேய சமூகங்களில் குற்றமாகப் பார்க்கப்படுகின்றன. உதாரணமாக 'ஆடை' அணிவதைக் குறிப்பிடலாம். இவ்வாறு சமூகத்தால் பார்க்கப்படும் பல விடயங்களில் சில ஏற்றுக்கொள்ளவே முடியாத விடயங்களைப் பிரித்தறிந்து அவற்றில் குறிப்பிட்ட நாட்டில் இருக்கும் அனைத்து மக்களுக்கும் பொதுவான பாதகங்களைத் தேடும் விடயங்கள் மற்றும் தனிமனிதன், சமூகங்கள் அரசுக்குப் பாதகங்களை ஏற்படுத்தும் விடயங்கள் என்பவற்றை சட்டமானது குற்றம் எனக் கூறுகின்றது. ஆகவே, 'குற்றம் என்றால் என்ன?' என்ற கேள்விக்கு எளிய முறையில், 'சட்டத்தால் தடுக்கப்பட்ட ஒரு செயலைச் செய்வது' என்று கூறிவிடலாம்.

### பங்களிக்கும் காரணிகள்

சமூகத்தில் குற்றம் ஒன்றுக்குப் பல காரணிகள் பங்களிப்புச் செய்கின்றன. அவையாவன.

### உள்ளச் சிதைவு

காதல் தோல்வி, பண இழப்பு, வாழ்க்கையில் தோல்வி என்பன ஏற்படும்போதும், இலட்சியம் ஈடேறாத போதும் உள்ளச் சிதைவு ஏற்படுகின்றது. இதன் பின்னர் அவர்கள் தங்கள் செயற்பாடுகள், நடத்தைகள் குற்றத்தன்மை உடையவை என்பதை உணர மறுக்கின்றனர். அதைத் தவறு என்பதை புரிய வைப்பதற்கும் உணரவைப்பதற்கும் மருத்துவ ஆலோசனைகள் தேவைப்படுகின்றன. மற்றும் எல்லோருக்கும் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் ஏனைய உறவினர்கள், சூழலில் வசிப்பவர்களின் அக்கறையும் தேவைப்படுகின்றது. இவை அவர்களுக்கு கிடைக்காத பட்சத்தில் குற்றம் புரியும் மனநிலை அவர்களுக்கு அதிகமாக ஏற்படும். உள்ளச் சிதைவு சரி செய்யப்படாத காரணத்தால் குற்றம் புரிதலுக்கு சூழ்நிலையும் குற்றவாளியின் மன எண்ணமும் ஏற்பட்டு குற்றம் ஏற்படுவதற்குக் காரணியாக அமைகின்றது.

### சமூக அக்கறை இன்மை

குற்றம் அதிகரித்ததற்கும், குற்றம் ஏற்படுவதற்கும் முக்கிய காரணமாக சமூக அக்கறையின்மை அமைகின்றது. யாருக்கும் எந்தப் பிரச்சினை ஏற்பட்டாலும் நமக்கு எதுவிதமான பிரச்சினையும் இல்லை என்ற மனப்போக்குக் காரணமாக குற்றம் ஒன்று ஏற்பட்டால் சமூகத்தினர் முழுமையான அக்கறை செலுத்துவதில்லை. மக்கள் தொகைப் பெருக்கம் அதாவது அதிகரித்துவரும் மக்கள் தொகை காரணமாக வறுமை, பற்றாக்குறை ஆகியன ஏற்படும்போது பசி பட்டினிகளில் இருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள தவறான குற்றச்செயல்களில் ஈடுபடுகின்றனர்.

### சமூக அடக்குமுறைகள்

சமூகத்தினால் ஏற்படுத்தப்படுகின்ற அடக்குமுறைகள் காரணமாக மனிதன் சட்டத்தை மீறி பாரதூரமான வன்முறையான குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றான்.

### போதைப்பொருள் பாவனை

இன்று சமூகத்தில் இடம்பெறுகின்ற பல குற்றச் செயல்களுக்கு போதைப்பொருள்களான கஞ்சா மற்றும் ஹெரோய்ன் ஆகியவை தூண்டுதலாக அமைகின்றன எனலாம். பெரும்பாலும் பாலியல் குற்றங்கள், மற்றும் கொள்ளை மற்றும் கொலை தொடர்பான குற்றங்களுக்கு தூண்டுதலாக இவை அமையும்.

குற்றங்களானவை சமூகத்தின் சீரான தன்மையை இல்லாமல் செய்ய முனைகின்றன எனக் கூறலாம். அதாவது நாளுக்குநாள் குற்றங்கள் அதிகரித்த வண்ணமே காணப்படுகின்றன. இதனால் சமூகமானது வன்முறை மிக்க ஒரு சமூகமாக மாற்றம் அடைகின்றது. தற்காலத்தில் அதிகமான குற்றங்கள் போதைப்பொருள் பாவனையால் ஏற்படுகின்றன என சிலர் கூறுகின்றனர். குற்றம் ஏற்பட பல காரணிகள் செல்வாக்கு செலுத்துவதை எம்மால் அறிய முடியும்.

சமூகத்தில் குற்றங்கள் பல தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. அதாவது வன்முறை சம்பவங்கள் அதிகரித்தல், சமூகச் சீர்கேடுகள் அதிகரித்தல், ஒழுக்கமற்ற சமூகம் ஒன்று உருவாதல், புத்திஜீவிகள் வர்க்கம் உருவாகுவது குறைவடைதல், குற்றவாளிகளின் எண்ணிக்கை அதிகரித்தல், சமூகம் பிற்படுத்தப்பட்ட சமூகமாக மாறுதல் ஆகிய அம்சங்கள் சமூகத்தில் தாக்கம் செலுத்துகின்றன. குறிப்பாக சமூகத்தில் அதிகளவாக குற்றங்கள் ஏற்படுகின்ற போது எதிர்கால சந்ததியினுடைய நிலை கேள்விக்குறியாகின்றது.

சமூகத்தில் இடம்பெறும் குற்றங்கள் அதிகரித்துச் செல்வதை அவதானிக்க முடிகின்றது. ஆரம்பத்தில் சிறு குற்றங்களாக இருப்பவற்றைத் தவிர்ப்பதன் மூலம் பாரதூரமான குற்றச்செயல்களில் இருந்து சமூகத்தை விடுவித்துக்கொள்ளலாம்.

சமூகம் ஒன்றின் வளர்ச்சிக்கு, 'குற்றங்கள்' தடையாக உள்ளதை அவதானிக்க முடிகின்றது. குற்றங்கள் எவ்வளவுக்கெவ்வளவு கட்டுப்படுத்தப்படுகின்றனவோ அவ்வளவுக்கு அவ்வளவு சமூகத்தில் ஜனநாயகம் மேம்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஞ்ச அமிர்தம்!





இலங்கையில் உள்ள கலைஞர்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இயல், இசை, நாடகம் ஆகிய கலைகளை உள்ளடக்கிய சங்கமிப்பு 'பஞ்ச அமிர்தம்' எனும் தலைப்பில் யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதில் நாடெங்கிலும் உள்ள கலைஞர்கள் கலந்துகொண்டு தமது திறமையினை வெளிப்படுத்தினார்கள்.





## வில்லையின் வழியாக...

நெதர்லாந்துத் தூதரகத்துடன் இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனம் இணைந்து நடத்தும் உலக ஊடகப் புகைப்படக் கண்காட்சி யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. புகைப்பட ஊடகவியலில் சர்வதேச விருதுகளை வென்ற புகைப்படங்கள் உட்பட மிகச்சிறந்த படைப்புக்கள் இதன்போது காட்சிப்படுத்தப்பட்டன.



# சிறந்த ஒழுக்கசீலர்களாய் நவீன யுகத்தை வெல்வோம்

பத்மசேனன் சனோசன் (பி.ஏ.)



வெ 20

“ஒழுக்கம்” என்பது. நாம் அதிகம் கேள்விப்பட்ட ஒரு வார்த்தை. ஆனாலும் அதனை வாழ்க்கையில் நாம் பின்பற்றுகின்றோமா? ஆம், பின்பற்றுகின்றோம். ஆனால் அனைத்திலும் பின்பற்றுகின்றோமா? என்றால் இல்லை. பாலர் பாடசாலை முதல், பல்கலைக் கல்வி வரை ஒருவன் மாணவனாக ஒழுக்கத்தைக் கற்றுக்கொள்ளக்கூடிய பல்வேறு சூழ்நிலைகள் காணப்படுகின்றன. எனவேதான் ஒருவருடைய வாழ்க்கையில் வெற்றி எனும் முழுமையான இறுதிப்புள்ளியைச் சென்றடைய ஒழுக்கம் தேவைப்படுகிறது.

ஒழுக்கம் என்பது ஒரு மனிதனின் ஒட்டுமொத்த வாழ்வை குறிக்கின்றது. இன்று எமது சமூகத்தில், குடும்பத்தில், நாட்டில், உலகத்தில் பல்வேறு நெருக்கடிகள் மனித பலவீனங்களால் நிகழ்த்தப்படுகின்றன. அனைத்துத் தீமையான விடயங்களும் இந்த ஒழுக்கவிதிக்கு எதிரான செயற்பாடுகளே ஆகும். இதனால்தான் நாம் நாளாந்தம் பல்வேறு இன்னல்களை அனுபவித்துவருகின்றோம்.

வாழ்க்கையில் நாம் சிறந்தவர்களாக, வெற்றியாளர்களாக, மற்றவர்களுக்குப் பயனுள்ளவர்களாக இருப்பதற்கு ஒழுகத்துடன் பயணிக்கவேண்டும்.

பெரும்பாலான சமயங்களில் வெற்றி அதிகம் தொலைவில் இருப்பதற்கு ஒழுக்கமற்ற அறிவே காரணமாக இருந்துவிடுகின்றது. வெற்றியாளர்கள் தங்களைச் சுய ஆய்விற்கு உட்படுத்தி தங்கள் ஒழுக்கவிடயங்களை சீர்செய்கின்றார்கள். வாழ்க்கையில் முன்னேறியே ஆகவேண்டும் என்ற எண்ணம் கொண்டவருக்கு ஒழுக்கம் ஓர் அணிகலனாக இருக்கவேண்டுமே தவிர அதனை எதிரியாக மாற்றிவிடக்கூடாது.

தங்களை வளர்த்துக்கொள்ள மற்றவர்களிடம் இருந்து கற்றுக்கொள்ள அதிகம் விரும்புவார்கள். தனிமனித முன்னேற்றத்திற்கு மாத்திரமின்றி சமூகத்தின் கனவை அடைவதற்கும் ஒழுக்கம் ஒளி கொடுக்கும்.

எங்களது ஒவ்வொரு செயற்பாட்டிலும் நாம் ஒழுக்கம் என்ற உயரிய பண்பை பேணுவோமாக இருந்தால் அவ்வொழுக்கம் வெற்றியின் திசைக்கு எங்களை அழைத்துச் செல்லும். “இரகசியம்” எனும் நூலின் ஆசிரியர் குறிப்பிட்டது போன்று, “ஒரு கார் இரவில் பயணப்படும்போது அதன் வெளிச்சம் குறிப்பிட்ட அளவு தூரம் மட்டுமே ஒளிருகின்றது. எனினும் போய்ச்சேரவேண்டிய தூரத்தையும் போய்ச்சேர்கின்றது.” இதனைப் போலதான் நாம் எமது வெற்றியின் இறுதியினை விட ஒழுக்கம் எவ்வளவு இருக்கிறது என்று அதனை சீர்ப்படுத்தினால் அவ்வொழுக்கம் வெற்றிக்கு கொண்டு போய்ச் சேர்க்கும். வெற்றி வந்தால் பணிவும், தோல்வி வந்தால் துணிவும் ஒருவகை ஒழுக்கம்தான். ஒரு காரியத்தினை சரிவர அந்த நேரத்தில் தூய்மையாகச் செய்துமுடிப்பதும் ஒருவகை ஒழுக்கமாகும்.

“உன்னை உன்னால் உயர்த்திக்கொள் உன் நண்பனும் நீ, உன் பகைவனும் நீ” (பகவத் கீதை)

புதன்பொய்கைக்கு நீங்களும் எழுதலாம்
0773165555
puthanpoikaiuthayan@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



தோற்றம்
27 . 10 . 1953

மறைவு
04 . 02 . 2025

### புவிபாலசிங்கம்-நிர்மலா

யாழ் நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட புவிபாலசிங்கம் நிர்மலா அவர்கள் நேற்று (04.02.2025) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா-தங்கமணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் புவிபாலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் சுதர்சனின் பாசமிகு தாயாரும் பிரியநிலாவின் பாசமிகு மாமியாரும் தர்வினின் பாசமிகு போர்த்தியும் தர்மராஜா, சகுந்தலாதேவி, ஜெயலட்சுமி, சற்குணமணி, காலஞ்சென்ற பாலசுந்தரம் மற்றும் வைரவநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற துரைசிங்கம் மற்றும் சரோஜினிதேவி, மனோன்மணி, இராஜேஸ்வரீ, சத்தியநாதன், ஆனந்தராசா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.02.2025) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிற்பகல் 02.00 மணியளவில் நீர்வேலி சீயாகாட்டு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 958 7076
076 039 2163

## மரண அறிவித்தல்



தோற்றம்
03 . 01 . 1930

மறைவு
03 . 02 . 2025

### அப்பாப்பிள்ளை நாகலிங்கம் (பெரியவர்)

(முன்னாள் சிமெந்து தொழிற்சாலை, பார ஊர்தி இயக்குனர்)

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாப்பிள்ளை நாகலிங்கம் அவர்கள் நேற்று முன்தினம் (03.02.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாப்பிள்ள்ளை-ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து, சின்னத்தம்பி, செல்லத்துரை, உடையார் ஆகியோரின் சகோதரரும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் நந்தினி, நந்தகுமார், நந்தசீலன், சரவணபவன், சந்திரகுமார், பாலச்சந்திரன், இராமச்சந்திரன், சிவபாலன், சுகந்தினி, முருகதாசன், சுபாஜினி, ஆகியோரின் தந்தையும் மகேந்திரரட்ணம், வசந்தா, அருள்ராணி, சுதர்ஜினி, கௌரி, சுவந்தி, அருள்மதி, றஞ்சனா, ஞானசேகரம், கவிதா, சசிவரன் ஆகியோரின் மாமனாரும் றஜிதன், றஞ்சிதன்-நிவேக்கா, கஜலக்ஷா, டிலக்ஷா, நிலக்ஷன், வைஸ்ணவி, சாம்பவி, யதுஷன், தக்ஷிகா, தன்ஷிகா, கஜிதன், யஸ்வினி, டக்ஷா, திரிஷா, அக்ஷயா, அஸ்வி, லக்ஷன், கஜிபன், றஜீபன், மகிஷா, லதிகா, லிவிந் ஆகியோரின் பேரனும் சுபிராவின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.02.2025) வியாழக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் மாவட்டபுரத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக தச்சன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இராஜ இராஜேஸ்வரி அம்மன் வீதி,
மாவிட்டபுரம்.
077 615 7567

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



தோற்றம்
19 . 01 . 1997

மறைவு
04 . 02 . 2025

### தங்கவேல் விபீஷன்

கைலாசப் பிள்ளையார் கோவிலடி நல்லூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தங்கவேல் விபீஷன் அவர்கள் நேற்று (04.02.2025) செவ்வாய்க்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் பொன்னுத்துரை தங்கவேல் (பொன்னுத்தரை-ஸ்ரோர்ஸ்)- கலைவாணி தம்பதியரின் ஏக புதல்வனும், கிருஷாந்தி (ஆராய்ச்சி உதவியாளர், பனை ஆராய்ச்சி நிறுவனம்), ஜனனி (விரிவுரையாளர், Technology Faculty, யாழ் பல்கலைக்கழகம்), ரகிதா (களனி பல்கலைக்கழக மாணவி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் அருண்ராஜ் (ஆசிரியர், வேலணை மத்திய கல்லூரி), குகரஜீவன் (Community Manager,Yarl IT Hub) ஆகியோரின் மைத்துனரும் ஆதித்தன், அத்விகா ஆகியோரின் அன்பு மாமனும் சிவயோகநாதன், முத்துக்குமாரசாமி, ராசமணி, சிவலிங்கம், கிருபானந்தபாலினி, காலஞ்சென்றவர்களான செல்வரத்ணம், பரமேஸ்வரி ஆகியோரின் மருமகனும் வடிவேல், செல்வராணி, காலஞ்சென்ற மகேந்திரன் மற்றும் திருமகள், உதயகுமார், சிவகொங்கா ஆகியோரின் அன்பு பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.02.2025) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

175/6 கைலாசப் பிள்ளையார் கோவில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
077 346 6589
077 491 5953

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



தோற்றம்
16 . 08 . 1944

மறைவு
04 . 02 . 2025

### கனகசபை இரவிச்சந்திரன்

(சாயி கிருஷ்னா பல்பொருள் வானிப உரிமையாளர்)

நெல்லியடி குருந்தட்டியைப் பிறப்பிடமாகவும், காளையந் தோட்டம் நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை இரவிச்சந்திரன் அவர்கள் நேற்று (04.02.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை-ராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லையா-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சுசிலாதேவியின் அன்புக் கணவரும் அகல்யா, காயத்திரி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற கமலரூபன் மற்றும் சுரம்யா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.02.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

காளையந்தோட்டம்,
வதிரிச்சந்தி.

தகவல்:
குடும்பத்தினர்
072 774 8800

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
23 . 02 . 1944

மறைவு
03 . 02 . 2025



## கமலாதேவி இராஜசுந்தரம்

(கொக்குவில் இந்துக் கல்லூரி ஓய்வு நிலை ஆசிரியரும் பழைய மாணவியும்)

அச்சுக்கூட ஒழுங்கை கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் மாதகலை வாழ்விடமாகவும் தற்போது குளப்பிட்டி ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட கமலாதேவி இராஜசுந்தரம் அவர்கள் நேற்று முன்தினம் (03.02.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமச்சந்திரன்- இரத்தினம்மா (சந்திரா) தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இராஜசுந்தரம் (முன்னாள் பொது முகாமையாளர், பண்டத்தரிப்பு பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்) அவர்களின் அன்பு மனைவியும் Dr.முரளீதரனின் அன்புத் தாயாரும் Dr.அபிராமி அவர்களின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற இரவிச்சந்திரன் , இரவிசேகரன் மற்றும் குகசாந்தி ஆகியோரின் சிறிய தாயாரும் காலஞ்சென்ற சிறினிவாசன், நேசரத்தினம், இரதிதேவி மற்றும் திருமகள், பாஸ்கரன், தேவகி, இராகுலன், சுகந்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும் பூதத்தம்பி (நீர்வேலி வடக்கு), பத்மநாதன் (சம்பியன் வீதி), தவரத்தினம், கனகா, திலகநாதன், கோசலை, விக்கினேஸ்வரன் ஆகியோரின் மைத்துனியும் ஆதிரா, அர்யூன், ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
இ.முரளீதரன் (மகன்)
ப.பகீரதன் (பெறாமகன்)
077 767 8763, 077 786 0076

# 28ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
31 . 08 . 1964

மறைவு
16 . 01 . 1997



## சீவரத்தினம் உதயகுமார்

(கலட்டிக்கண்ணன்)

திதி : அட்டமி

உதிராத சொற்களில்,
மௌனத்தின் ஆழத்தில்
நினைவுகளின் நிழலில்
சிந்தும் கண்ணீரில் என
ஆண்டுகள் இருபத்தெட்டே ஆனாலும்
அப்பா நீர் எம் இதயத்தில்
யாவுமாய் இருக்கின்றீர் !

உங்கள் நினைவுகளோடு
குடும்பத்தினர்

(CS/57404) J-1

### பரிசளிப்பு!

கிளிநொச்சி பேசாலை சி.சி.த.க பாடசாலையின் பரிசளிப்பு விழா அதிபர் ந.ராமதாஸ் தலைமையில் பாடசாலையின் கொய்க்கா மண்டபத்தில் இன்றுபுதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக மெய்யியல் துறை முதுநிலை விரிவுரையாளர் தி.திலீபன், சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி வடக்கு வலய கல்வி முகாமைத்துவப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஹம்சத்தனி வினோதன், ஓய்வு நிலை அதிபர் ந.தாமோதரம்பிள்ளை, கௌரவ விருந்தினராக பழைய மாணவன் தா.சிவானந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-22-159)

# மரண அறிவித்தல்



தோற்றம்
14.09.1951

மறைவு
02.02.2025

## செல்வி சியாமளாதேவி சிவசுப்பிரமணியம்

மூன்றாம் கட்டை, கல்வியங்காடு யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், இலக்கம் 22 1/4 Auborn Side தெகிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட சியாமளாதேவி சிவசுப்பிரமணியம் அவர்கள் கடந்த 02.02.2025 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம் - அமிர்தம்மா தம்பதியரின் மகளும், திருமதி கமலேஸ்வரி தவலோகநாதனின் பெறாமகளும், சிவமலர், பரமசிவ யோகேஸ்வரன், தனஞ்செயன், யசோதாதேவி காலஞ்சென்ற புரந்திராதேவி மற்றும் சிவகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற தில்லைநடராஜன் மற்றும் ரங்கநாதன், டொறின், ராதிகா ஆகியோரின் மைத்துனியும், அருணன் - பவானி, சுகன்யா - டிலான், பிரகாஷ் -தனுஷா, பிரசாந்த் -சுகந்தி, சுரேஷ்கிரிசான், ஜீவன்ஜி ஜீவகி ஆகியோரின் சிறியதாயும் மற்றும் மாமியாரும், அகிஷன், அனுஷன், ஆஸ்வினி, அஷ்வின், அமீரா, அவீனா, பிரணிக்கா கருணிக்கா கஷ்வினா, டிவ்யானா , எஸ்ரி ஆகியோரின் பாட்டியும் ஆவார்

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.02.2025) புதன்கிழமை முற்பகல் 10 மணி அளவில் மூன்றாம் கட்டை கல்வியங்காடு யாழ்ப்பாண இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அன்னாரின் மரண அறிவித்தலை உதயனின் இணையப்பக்கத்திலும் பார்வையிடலாம்.

மூன்றாம் கட்டை,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்

தகவல்: குடும்பத்தினர்
077 508 0317

(CS/57414) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 23 . 06 . 1953

மறைவு 19 . 01 . 2013



### கனகசுந்தரம் சிவராசா

திதி: பூர்வபக்க அட்டமி

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
பன்னிரண்டாண்டுகள் சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

கோயிலாமனை,
கொடிகாமம்.

(CR/44256) J-1

குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 23 . 02 . 1944

மறைவு 03 . 02 . 2025



### திருமதி கமலாதேவி இராஜசுந்தரம்

எமது வளர்மதியின் வளர்ச்சிக்கு பெரிதும் உறுதுணையாக இருந்தவரும் எமது முன்னேற்றக்கழக உறுப்பினருமாகிய Dr. R. முரளிதரன் அவர்களது அன்புத்தாயார் திருமதி கமலாதேவி இராஜசுந்தரம் அவர்கள் இறைபதம் அடைந்து விட்டார். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அமரரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்திற்கு எமது வளர்மதி முன்னேற்றக்கழகம் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

சம்பியன் லேன்,
கொக்குவில்.

கொக்குவில் வளர்மதி
முன்னேற்றக்கழகமும்
வளர்மதி நிறைவாழ்வகம்





## யாழ். கோட்டையில் கிளீன் ஶ்ரீலங்கா

இலங்கை சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் கிளீன் ஶ்ரீலங்கா வேலைதிட்டம் யாழ். மாவட்டச் செயலர் ம. பிரதீபன் தலைமையில் யாழ். கோட்டையை அண்டிய பிரதேசங்களில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

நிகழ்வில், இலங்கை சாரணர் சங்கத்தின் ஆணையாளர் ஜான்பிரித் பெர்னாண்டோ, 512ஆவது படைப்பிரிவு கட்டளைத்தளபதி கேணல் எல்.ஏ.ஆர். குணரத்ன, யாழ். மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் கலிங்க ஜெயசிங்க, யாழ். மாநகரசபை ஆணையாளர் எஸ். கிருஷ்ணேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-41-27)

## மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 11 . 1943

மறைவு 02 . 02 . 2025



### நல்லதம்பி மயில்வாகனம்

மீசாலை வடக்கு மீசாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி மயில்வாகனம் அவர்கள் கடந்த 02.02.2025 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - ராசம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - அன்னம்மா தம்பதியரின் மருமகனும், உதயகுமார் (லண்டன்), உதயமலர், உதயராணி, சிவகுமார், சசிக்குமார் (சுவிஸ்), கருணகுமார் (பிரான்ஸ்), ஆனந்தகுமார், சசிகரன் (லண்டன்), தர்சினி (பிரான்ஸ்), தனுசா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவறஞ்சினி ரவிக்குமார் காலஞ்சென்ற மதிவதனராசா மற்றும் இளவேணி, சங்கிதா, சர்மிளா, நிதி, காயத்திரி, கேசவன், கலைவாணன் ஆகியோரின் அன்பு மாமனாரும், விதுசா - வைஸ்ணவன் (கொலண்ட் ), யதுசன் - சஞ்சயா, லாவணியா - கஜல் காலஞ்சென்ற துசாந்தன் (பிரான்ஸ்) மற்றும் சோபனா - யசன், பிரான்ஸ் டிசாந்தன் - மிதுசா (லண்டன்) மதுசூதனன், மதுகோபி (பிரான்ஸ்) - தினேஸ், மதுரா (யா.ப.க.கழகம்), மதுசுஜா (யா.ப.க.கழகம்) - நயூத்திரன், மதுனியா, நிமல்ராஜ் (பிரான்ஸ்), ராஜ்குமார் (பிரான்ஸ்), பிரதிபன், சாரா (சுவிஸ் ப.க.கழகம்) ஷமீரா (சுவிஸ் ப.க.க.கழகம்), அபிசா, அபினா, அபிஷ், நிலோஜன், அக்சனா, டிலக்சனா, அஸ்வின், அட்சயா, ஜஸ்மிகா, மிதுனா, பிரியந்தி ஆகியோரின் அன்புப்பேரனும், லியானா, ஆதித் ஆகியோரின் அன்புப் பூட்டனும், கணபதிப்பிள்ளை, வேலுப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவப்பிரகாசத்தின் அன்பு மைத்துனனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.02.2025) புதன்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மீசாலை வேம்பிராய் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

மீசாலை வடக்கு,
மீசாலை.

தகவல்:
குடும்பத்தினர்

(CS/57401) J-1

## மரண அறிவித்தல்

மலர்வு 06 . 08 . 1939

உதிர்வு 03 . 02 . 2025



### மரியநாயகம் மேரி திரேசா

செட்டிதோட்டம் ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், சுவாட்ஸ்லேனை வசிப்பிடமாகவும் கொண்ட மரியநாயகம் மேரி திரேசா அவர்கள் நேற்று முன்தினம் (03.02.2025) திங்கட்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசீர்வாதம் - மரியம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற மரியநாயகத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சூசை தாசன் மற்றும் ஸ்ரீபன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், மேரி லூட்ஸ் (சுவிஸ்), மேரி பற்றீசியா (சுவிஸ்), மேரி வெற்றீசியா ஆகியோரின் அன்புத் தாயாரும், குணசீலன் (சுவிஸ்), அருள்நேசன் (சுவிஸ்), டொனால்ட் பாஸ்க்கர் ஆகியோரின் பாசமிகு மாமியும், பஸில், பிறிஜிட், பென்ஜமின் , நிஷான் , றொசில்டா, அன்டனிதாஸ் , அபிஷிகா , றிஷிக்கா ஷறோன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், வோல்ஷியா அன்ரோரா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதி வழிபாடுகள் நாளை (06.02.2025) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இரங்கல் திருப்பலிக்காக மானிப்பாய் புனித அன்னாள் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு 10.00 மணியளவில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு மானிப்பாய் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சுவாட்ஸ் லேன்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 444 0277

(CS/57414) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயகமெங்கும்...

கிளிநொச்சி மாவட்டத்தில் காணாமலாக்கப்பட்ட உறவுகளின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் போராட்டம், கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்துக்கு முன்பாக ஆரம்பித்தது. கிளிநொச்சியின் பழைய மாவட்டச் செயலகம் வரை பேரணியும் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தின் ஒரு பகுதியாக, கறுப்பு நாள் போராட்ட அறிக்கை வாசிக்கப்பட்டது. அதில் உள்ளதாவது:-

இலங்கையின் சுதந்திரதினமான பெப்ரவரி மாதம் நான்காம் திகதியை கரிநாள் என்று நாம் அறிவித்துள்ளோம். எமது நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை. இந்தத் தீவின் வடக்கு - கிழக்கை தாயகமாகக் கொண்ட தமிழ் தேசத்தை ஆக்கிரமித்திருந்த ஆங்கிலேயர் தாம் கொண்டிருந்த ஆக்கிரமிப்பு மேலாதிக்கத்தை தீவின் பௌத்த - சிங்கள தேசத்திடம் தாரைவார்த்த நாளே கரிநாளாகும்.

1948ஆம் ஆண்டு இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்பட்ட நாளிலிருந்து தமிழர்கள் தமது வாழ்வாதாரங்களை ஒவ்வொரு துறையிலும் இழக்கத் தொடங்கினார்கள். 1956ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட தனிச் சிங்கள சட்டமூலம் எமது மொழி, பண்பாட்டுப் படுகொலையின் தொடக்கமாகும்.

1958ஆம் ஆண்டும் அதன் பின்னரும் நடைபெற்ற திட்டமிடப்பட்ட இனக்கலவரமும், இனப்படுகொலையும் எமது இனத்தை மேலும் நாசமாக்கியது. 1970ஆம் ஆண்டிலும் அதன் பின்பும் தமிழ் மாணவர்கள் பல்கலைக்கழக தரப்படுத்தலின் ஊடாக தமிழர்கள் பல்கலைக்கழகக் கல்வியைப் பெறுவது தடுக்கப்பட்டது.

1978ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பின் மூலம் இலங்கை ஒரு பௌத்த - சிங்கள நாடாக பிரகடனப்படுத்தப்பட்டது. 1981ஆம் ஆண்டு இலங்கை ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான சிங்கள அரசின் அமைச்சர்களான காமினி திஸாநாயக்க, ஶ்ரீல் மத்தியூ முதலியோர் தலைமையிலான குழுவினரும் அவர்களுடன் ராணுவமும் பொலிஸாரும் முன்னின்று யாழ்ப்பாண பொது நூலகத்தை எரித்தமை இன்னொரு இன அழிப்பின் உச்சத்தைக் காட்டியது. இலங்கையை ஆண்டுவந்த பல்வேறு சிங்கள ஜனாதிபதிகளால் தொடர்ந்து பல்வேறுபட்ட வழிகளில் திட்டமிட்டு நடத்தப்படுகின்ற இனப்படுகொலைகளில் நாகர்கோவில் விமான குண்டு தாக்குதல், நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலய தாக்குதல், நூற்றுக்கணக்கான செம்மணி புதைகுழிகள் போன்ற இனப்படுகொலைகள், இனப்படுகொலைகளின் சாட்சியைப் பகிரும். தொடர்ச்சியான அதேபோல் கடந்த சில தசாப்தங்களாக சிங்கள இராணுவத்தால் தொடர்ந்து நடத்தப்பட்ட கொலை, வன்புணர்வு, சித்திரவதை, வலிந்து காணாமல் ஆக்கப்படுத்தல் ஆகியனவும் ஒரு சாதாரண நாளாந்த நிகழ்வுகளாயின.

இந்த மிலேச்சத்தன நடவடிக்கைகள் 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் பேரவலம் வரை நிகழ்ந்தன. இன்று வரை எந்த நீதியும் இன்றி நாம் சர்வதேச நீதி பொறிமுறையை வேண்டி போராடிக் கொண்டிருக்கிறோம் - என்றுள்ளது.

முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை உள்ளிட்ட பகுதிகளிலும் நேற்று கறுப்புநாள் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

கிளிநொச்சியில் இடம்பெற்ற போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சிவஞானம் ஶ்ரீதரன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், எம்.கே.சிவாஜிலிங்கம் என பலரும் கலந்துகொண்டனர்.

(அ-ம-27-66-20-125-113)

## இறங்கியது...

முன்றலில் பிரதான கம்பத்தில் பறக்கவிடப்பட்டிருந்த இலங்கையின் தேசியக் கொடியை இறக்கிவிட்டு கறுப்புக் கொடியை ஏற்றினர். அதனைத் தொடர்ந்து பல்கலைக்கழக முன்றலில் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களுடன், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள்பேரெழுச்சி இயக்கத்தின் இணைத் தலைவர் தவத்திரு வேலன் சுவாமிகள் மற்றும் உரும்பிராய் உதவும் நண்பர்கள் அமைப்பினரும் இணைந்திருந்தனர்.

இதேவேளை, எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டபோது அதற்கு அண்டிய பகுதிகளில் பொலிஸ் மற்றும் இராணுவப் புலனாய்வாளர்கள் அதிகளவில் குவிக்கப்பட்டுத் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ-ம-66-25-20)

## அரசியலமைப்பின்...

பின்னர் அங்கு உரையாற்றும்போதே, பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசியலமைப்பு எனப்படும் சர்வாதிகார அமைப்புக்கு வழிவகுத்த சட்டக் கட்டமைப்பால் ஆட்சியாளர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்துள்ளனர். இதன் விளைவாக இனங்களுக்கு இடையே இலகுவாகத் தீர்க்கப்படவேண்டிய கருத்து முரண்பாடுகள் போராக மாற்றப்பட்டு நாட்டில் ஒரு பயங்கரவாத நிலைமை உருவாக்கப்பட்டது.

1990ஆம் ஆண்டுகளில் இருந்து ஊடக ஒடுக்குமுறை, ஊடகவியலாளர்களை காணாமலாக்குதல், படுகொலை செய்தல், வெள்ளைவான் கலாசாரம் போன்ற விடயங்கள் ஆட்சியாளர்களால் மிகவும் மோசமான வகையில் முன்னெடுக்கப்பட்டன. பேரழிவுகரமான போரால் தாயகம் ஆழமான பொருளாதார வீழ்ச்சியைச் சந்தித்தது. கடந்த இரண்டு தசாப்தங்களில் இந்தப் போக்கு மேலும் தீவிரமடைந்துள்ளது - என்றார். (அ-ம-இ)

## அபாயமான...

களாக யாழ்ப்பாணமும், மட்டக்களப்பும் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-இ)

## ஆராய்வதற்கு...

அங்கிருந்து வெளியேறியுள்ளனர். மன்னாரில் சட்டவிரோத கனியமணல் அகழ்வுகள் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றன. இதையடுத்து, கனியமணல் அகழ்வைக் கட்டுப்படுத்தும் வகையில், அண்மைக்காலமாக மக்களால் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-56)

## தவறான...

பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை நிறைவுசெய்த அவர், வேலைகிடைக்காத விரக்தியில் இருந்த நிலையில் நேற்றுத் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார் என்று விசாரணைகளின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறப்பு விசாரணைகளை திடீர்மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ-ம-26-27)

## இலங்கைக்கு...

நாட்டின் தேசிய சுதந்திரதின விழா சுதந்திர சதுக்கத்தில் நேற்று இடம்பெற்றது. நிகழ்வில் உரையாற்றும்போது ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொருளாதார, சமூக, கலாசார சுதந்திரத்தை முழுமையாகப் பெற்றுக்கொள்ள ஒரே போர்க்களத்தில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து போராடவேண்டும். தாய்நாட்டுக்காக நாம் அனைவரும் ஒற்றுமையாக சுதந்திரப் போராட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுக்கவேண்டியுள்ளது.

இன்று நாட்டு மக்களின் வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியாக, இந்த சுதந்திர சதுக்கத்தில் பெருமை மிக்க தேசியக் கொடியின் முன், சுதந்திரத்தின் எதிர்கால எதிர்பார்ப்புக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வரலாற்றுச் சுமையைத் ஏற்றுக் கொண்ட உங்கள் சகோதரனாக நான் நிற்கிறேன்.

என்னைப் போன்றே இந்த சுமையை தாங்கிக்கொண்டு இந்த நேரத்தில் நீங்களும் என்னுடனும் என்னைச் சுற்றியும் நிற்கிறீர்கள் என்று நம்புகிறேன். எமது பொருளாதார, சமூக, கலாசார சுதந்திரத்துக்காக அதாவது நவீன பிரஜைகளாக இந்த நாட்டில் பெருமையுடன் வாழத் தேவையான சுதந்திரத்தை உருவாக்குவதற்காக நாம் ஒன்றிணைந்து பயணிக்கவேண்டும்.

நீண்டகாலமாக காலனித்துவத்துக்கு அடிபணிந்தவர்களாக எம்மை பிரித்து ஆண்ட இன, மத, ஜாதி வேறுபாடுகளை அகற்றி இந்த சமூகத்தைத் தூய்மைப்படுத்தப்பட வேண்டும். நீங்கள் அனைவரும் நாட்டிற்கான முழுமையான பொருளாதார, சமூக மற்றும் கலாசார சுதந்திரத்தை வென்றெடுக்கும் போர்க்களத்தின் போராட்டக்காரர்கள் என்பதை நினைவில் கொள்ளவேண்டும் - என்றார். (அ-ம-இ)

## கறுப்புநாள்...

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு சர்வதேச நீதி வேண்டும், தமிழ் அரசியற் கைதிகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும், பௌத்தமயமாக்கல் உடன் நிறுத்தப்படவேண்டும், தமிழர் தாயக பிரதேசத்தில் தொடர்ச்சியாக நடந்துவரும் நில அபகரிப்பு கைவிடப்பட வேண்டும், தாயக வளத்தை அபகரிப்பது உடனடியாக நிறுத்தப்படவேண்டும், தமிழர் தாயக பிரதேசத்தில் இருந்து ராணுவம் வெளியேற்றப்படவேண்டும், தமிழினப் படுகொலைக்கு சர்வதேச நீதி வேண்டும், சிவில் செயற்பாட்டாளர்கள் மீதான அச்சுறுத்துதல்கள் நிறுத்தப்பட வேண்டும், ஊடகவியலாளர்களை அச்சுறுத்துவது நிறுத்தப்படவேண்டும், தமிழர்களின் தாயகம், தேசியம், அரசியல் சுயநிர்ணயம் என்பனவற்றை உடனே அங்கீகரிக்க வேண்டும், எமது தலைவிதியை நாமே தீர்மானிக்க சர்வதேச நியமங்களுக்கு அமைய எமது தாயக பிரதேசத்தில் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் ஆகியன அமைந்துள்ளன. (அ-ம-27-66-20-125-113)

**(கறுப்பு நாள் போராட்டப் படங்கள்:-பக்கம் 06)**

**31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்**



விண்ணகம் 07.09.1955



மண்ணகம் 06.01.2025

கடந்த 06.01.2025 திங்கட்கிழமை அன்று இறைபதமடைந்த

எமது அன்புக்குரிய குடும்பத் தலைவி

**அமரர் பத்திநாதன் இராக்கினி**

அவர்களின் மரணச்செய்தி அறிந்து எமது தெய்வத்தின் இறுதி ஊர்வலத்தில் நேரடியாக கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி ஊடாகவும் சமூக வலைத்தளங்கள் ஊடாகவும், எமக்கு ஆறுதல்களையும் இரங்கல்களையும் கூறிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் எமது குடும்பத்தார் சார்பாக மனமார்ந்த நன்றிகள்.

இன்று (05.02.2025) புதன்கிழமை அம்மாவின் 31 ஆம் நினைவுநாளில் தங்களையும் தங்கள் குடும்பத்தினரையும் காலை திருப்பலியிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்**

**முள்ளிவாய்க்கால் கிழக்கு, முல்லைத்தீவு**

(CS/57426) J-1 **0770378201**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலைவாய்ப்பு ஆசைகாட்டி ஒரு கோடி ரூபா மோசடி!

கொழும்பு, பெப்.5

ருமேனியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் வேலை பெற்றுத் தருவதாகக்கூறி தலா 16 இலட்சம் ரூபா வீதம் 12 பேரிடம் ஒரு கோடியே 92 இலட்சம் ரூபா மோசடி செய்த குற்றச்சாட்டில் மூதூரில் 29 வயதான ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். வேலை வாய்ப்புகளுக்காக 74 பேரிடம் இருந்து பெற்றுக்கொண்ட ஆவணங்கள் அவர்களால் கைப்பற்றப்பட்டுள்ளது. முறைப்பாட்டுக்கு அமைய அந்த முகவர் நிலையத்தின் உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார். வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்காக யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த 70க்கும் மேற்பட்டவர்களிடம் வேலைவாய்ப்பு முகவர் நிலைய உரிமையாளர்கள் பணம் பெற்றுள்ளார் என்று கூறப்படுகின்றது. (ஏ-இ)

## விற்பனைக்கு

- யாழ் ஆஸ்பத்திரி வீதியில் HNB க்கும் Signal சந்திக்கும் இடையில் 6 கடைகளும்
- யாழ் மின்சார நிலைய வீதியில் நர்மதா நகைக் கடைக்கும் TOP PAZ கடைக்கும் இடையில் 6 கடைகளும்
- யாழ் கஸ்தூரியார் வீதியில் கபிலா பாட்டா கடைக்கும் வின்சர் சந்திக்கும் இடையில் 6 கடைகளும்
- யாழ் ஸ்ரான்லி வீதியில் வெலிங்டன் சந்திக்கும் வின்சர் சந்திக்கும் இடையில் 6 கடைகளும்
- யாழ் பலாலி வீதியில் SVM எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக 5 பரப்புக் காணியும் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 077 723 2535

## காணி விற்பனைக்கு உண்டு

தெல்லிப்பளை வீமன்காமம் தெற்கு மதவடி வீதி K.K.S றோட்டின் சந்தைக்கு அருகாமையில் 100m உள்ளே 3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:

075 154 7200

## வீடு வாடகைக்கு

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் 3 அறைகள், 1 Hall, 1 Atached Barthroom, சமையலறையுடன் கூடிய மேல் மாடி வீடும்; ஒரு பெரிய அறை, 2 Hall, 1 Atached Barthroom, சமையலறையுடன் கூடிய வீடும் தனியானமின்சாரம், வழிப்பாதையுடன் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 074 273 9811

# மதுபோதையில் நிற்போர் வாடியடியில் அடாவடி

கிளிநொச்சி, பெப்.5

பூநகரி வாடியடியிலுள்ள வீதியோரப் பேருந்துத் தரிப்பிடங்கள் மற்றும் கைவிடப்பட்ட பிரதேசசபையின் பழைய சந்தைக்கட்டம் என்பவற்றில் இரவுநேரங்களில் போதையில் நிற்பவர்கள் அட்டகாசம் புரிந்து வருகின்றனர் என அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். இதுதொடர்பில் தொடர்பில் வாடியடியிலுள்ள பொலிஸ் நிலையத்தில் முறையிட்டாலும் பொலிஸார் கண்டுகொள்வதில்லை. குறிப்பாக ஒதுக்குப்புறமாக வுள்ளபிரதேசசபையின்பழைய சந்தைக் கட்டடத்தொகுதியில் நள்ளிரவு தாண்டியும் குடிவெறியில் இவர்கள் கொண்டாட்டங்கள் நடத்து கின்றனர் என்றும் மக்கள் சுட்டிக்காட்டினர். (ச-125)

## LITTLE MASTERS' PRESCHOOL

ஆங்கில தமிழ்மொழி மூலமான பாலர் பாடசாலை – திருநெல்வேலி

14 வருட முன்பள்ளி சேவையினை வழங்குவதற்கு எமது புதிய கிளையுடன் திருநெல்வேலிப் பிரதேசத்தில் நாம்..

அனுமதிக்கப்படும் வயதெல்லை

ADMISSION OPEN

3+ வயது மாணவர்கள்

4+ வயது மாணவர்கள்

5+ வயது மாணவர்கள்

- மிகத் துல்லியமான ஆங்கில உச்சரிப்புடன் எழுத்துப்பயிற்சி.
- தெளிவான தமிழ் உச்சரிப்புடன் எழுத்துப்பயிற்சி
- சிங்களப் பேச்சுடன் ஆரம்ப எழுத்தறிவு.
- பிள்ளைகளின் தற்காலத்திற்கேற்ப விளையாட்டுக்களுடன் கூடிய செயற்பாடுகள்.
- மதங்கள் அடிப்படையில் காலைப்பிரார்த்தனை செற்பாடுகள் உங்கள் மழலைகளுக்கு நீங்கள்
- எதிர்பார்த்து நிற்கும் அனைத்துச் செயற்பாடுகளும் எமது முன்பள்ளியில் முன்னெடுக்கப்படுகின்றன.

விளைத்திறன் மிக்க பிள்ளைகளாக இரு மொழிகளிலும் மாற்றித் தருகின்றோம் நாம்.

பிள்ளைகளின் செயற்பாடுகளை பார்வையிட lmm preschool எனும் Face book முகவரியை நாடுங்கள்

விரைந்து உங்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.



10th FEBRUARY Monday 8.00 AM

அன்று ஆரம்பமாகவுள்ளது.

பிரதான பலாலி வீதி,தர்மபடம், திருநெல்வேலி(வெற்றும் பாமசிக்கு அருகில்)

Our Branches:
- K.K.S Road, Jaffna.
- K.K.S Road, Inuvil.
- K.K.S Road, Mallakam. T.P :- 0777474741
- K.K.S Road,Tellippalai T.P :- 0761404180

(CS/57417) J-1

# மரண அறிவித்தல்



தோற்றம் 05 . 01 . 1938

மறைவு 03 . 02 . 2025

## மகாலிங்கம் தர்மபூபதி

யாழ். கீரிமலை போயிட்டியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும், கீரிமலையை வசிப்பிடமாகவும் கொண்ட மகாலிங்கம் தர்மபூபதி அவர்கள் நேற்று முன்தினம் (03.02.2025) திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கட்டையர் - சின்னக்கண்டு தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வன்னிக்குட்டி - கொத்தியார் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மகாலிங்கம் (வண்டில்காரர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிவஞானசுந்தரம் (அப்புலிங்கம் - முன்னாள் தொழில் அதிபர்), ஜெகதீஸ்வரி (தங்கா) மற்றும் விஜயகுமாரன் (சின்னண்ணை- சுவிஸ்), காலஞ்சென்ற விஜயலட்சுமி (வண்ணம்- ஜேர்மனி) மற்றும் சந்திரகலா(கலா- கொழும்பு), காலஞ்சென்ற மகாராஜா (அப்பன் - பிரித்தானியா) மற்றும் பிரபாகரன் (குஞ்சன் - பிரித்தானியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு ராசமணி, குனேஸ்வரி தர்மராஜா, மற்றும் நகுலேஸ்வரி நகுலேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தேவிகா முருகையா(தங்கவேல்), சங்கீதா, குணபாலசிங்கம், தவபாலசிங்கம், நிஷா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், தசாங்கன் கிருத்திகா - கோகுலன், லோகனா - சதீஸ், சர்மிளா - சிந்துஷன், பிரவீனா, பிரசன்னா, பிருந்தா, பிரியன், பிரவீன், பிரதீபன், ஜீவிதன், பிரித்தி, பிரித்தீஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், கஸ்வீன், சங்கவி, தர்சிகன், துவிசாளினி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (06.02.2025) வியாழக்கிழமை அன்று மு.ப 10:00 மணியளவில் கீரிமலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:-

| | |
|---|---|
| விஜயகுமாரன் (சின்னண்ணை) - மகன் | - +41 791 063 737, +94 752 092 769, |
| தவபாலசிங்கம் (தவம்) - மருமகன் | - +94 77 958 8967, |
| கோகுலன் - பேரன் | - +94 77 865 1354 |
| குணபாலசிங்கம் (குணம்) - மருமகன் | - +49 179 415 5906 |
| பிரபாகரன் - மகன் | - +44 787 050 2122 |

(CS/57412) J-1

தகவல் :
குடும்பத்தினர்
நகுலேஸ்வர வீதி,
கீரிமலை.

# 2ம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## ஜோசேப் அனோஜன் (அனோச்)

(கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவன், DHL Whare House Supervisor)



தோற்றம் 23.07.2003

மறைவு 05.02.2023

"இன்றுடன் இரண்டு ஆண்டுகள் ஓடிவிட்டன.
இப்படி எல்லாம் நடக்குமென்று நினைத்துக்கூட பார்க்கலடா
உன் மறைவை ஏற்றுக்கொள்வது எங்களுக்குப்
பெரிய சோதனையாகவே உள்ளதடா
நீ ஒன்றாக இருந்த தருணங்கள் மற்றும்
உன் அன்பும் ஆதரவும் எங்கள் வாழ்க்கையின்
எல்லாத்திசையிலும் ஒலிக்குதடா
நீ எங்கள் வாழ்க்கையில் இருந்தது
ஒரு நிலையான வரலாறாகவே உள்ளதடா.
உன்னுடன் வாழ்ந்த தருணங்கள் இன்னும்
புதியதாகவே எம் நினைவில் இருக்குதடா.
உன் இழப்பு எம் இதயங்களை
வெறுமையாக்கினாலும்,
உன் நினைவுகளை சுமந்தபடியே வாழ்கின்றோமடா.
உன் ஆன்மா நிம்மதியடைய
இறைவனை வேண்டுகிறோம்."

உள்ளம் உடைந்த
உடன்பிறப்பான அண்ணா
ஜோ.சனுஜன்

(CS/57286) J-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.02. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.